॥ श्रीः ॥

ஸ்ரீமதே ஸ்ரீவராஹ மஹாதேஶிகாய நம:

# ஸ்ரீ தேஶிக வைபவம்



ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ வராஹ மஹாதேஶிகன்
அருளியது


॥ श्रीः ॥

॥ ॥श्री ॥ ॥

श्रीमते श्री निगमान्त महा देशिकाय नमः

श्रीमते रङ्गरामानुज महा देशिकाय नमः श्रीमते श्रीवराह महा देशिकाय नमः

**ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீவராஹ மஹா தேஶிகன்**

அருளிய

# ஸ்ரீ தேஶிக வைபவம்

மற்றும்

# நாத ப்ரஹ்மம்


ஒலி நாடாக்களிலிருந்து தொகுத்து

உரையாக்கி நூல் வடிவில் அளிப்பவர்

ந்யாய வேதாந்த வித்யாநிதி

ஸ்ரீ உ.வே. காடந்தேத்தி திருச்சேறை,

**முனைவர் ஆஸூரி. இராமாச்சார்யார்**

ந்யாயசிரோமணி,

எம்.ஏ.ஆசார்யா, எம்.பில்., பிஹைச்.டி

*Cell: 94866 45951*



ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீவராஹ மஹா தேசிகனின் 57ஆம் திருநக்ஷத்ரம் ஸ்ரீசோபக்ருது ஸூ தைமீ 25உ உத்ராடம் (08-02-2024) அன்று கோயமுத்தூரில் வெளியிடப்பட்டது.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்

திருப்புல்லாணி வெளியீடு.

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


நூற்பெயர் : **ஸ்ரீதேஶிக வைபவம் மற்றும் நாதப்ரஹ்மம்**

தொகுப்பாளர் : முனைவர். **ஆஸூரி வீ. இராமன்,** ந்யாய வேதாந்த வித்யாநிதி

மொழி : தமிழ், ஸம்ஸ்கிருதம்

பதிப்பு : முதல் பதிப்பு

வெளியீட்டு நாள் : 08.02.2024

பக்கங்கள் : 56

வெளியிடுபவர் : **ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆஶ்ரமம், திருப்புல்லாணி.**



ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம், திருப்புல்லாணி தொடர்புக்கு

1) தி. ரகுவீரதயாள் - 9443301091/9791626731

2) ப்ருஹஸ்பதி எஸ். மணிவண்ணன் ஆராதகர் 9865673801

||ஸ்ரீ:||

## பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. அடியேன் செய்யும் விண்ணப்பம் | பக்கம் எண் | 4 |
| 2. தேசிக வைபவம் | பக்கம் எண் | 9 |
| 3. நாத ப்ரஹ்மம் | பக்கம் எண் | 46 |


குறிப்பு

**ஸ்ரீ தேசிக வைபவம்** சில ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீமத் ஆண்டவன் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அருளியது.

**நாத ப்ரஹ்மம் 2023** டிசம்பரில் சென்னை ஸ்ரீபார்த்தசாரதி சபாவில் மார்கழி இசை விழாவைத் துவக்கி வைத்து அருளியது.

இரண்டுமே அருமையான ஆராய்ச்சிக் கட்டுரைகள்.

ஸ்ரீ:

## அடியேன் செய்யும் விண்ணப்பம்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் மிகவும் மேன்மையானதாகச் சிறந்து விளங்கக் காரணம் **ஸ்வாமி தேஶிகனின் அவதாரமே** என்று சொன்னால் அது மிகையாகாது. ஆழ்வார்கள் ஆசார்யர்கள், **தொண்டீர் எல்லீரும் வாரீர், வையத்து வாழ்வீர்காள்** என்று உலக மக்களை அழைத்து தத்வ-ஹித-புருஷார்த்தங்களை உபதேஶித்ததுபோல அவர்கள் காண்பித்த வழியைப் பின்பற்றி ஸ்வாமி தேஶிகனும் **அந்தணர் அந்தியர் எல்லையில் நின்று அனைத்துலகும்** உஜ்ஜீவிக்க வேண்டுமென்று வடமொழி மற்றும் தமிழ் மொழிகளில் நூற்றுக்கணக்கான க்ரந்தங்களை இயற்றி எளிதில் தத்வ-ஹித- புருஷார்த்தங்களைப் புரிந்துகொள்ளும்படி அநுக்ரஹித்துள்ளார்.

**गुरुं प्रकाशयेत् धीमान् குரும் ப்ரகாஶயேத் தீமாந்** என்று தமது ஆசார்யனிடத்திலே அதிகரித்த எல்லா விஷயங்களையும் கருணையோடு தனது க்ரந்தங்கள் மூலமாக நமக்கு உபதேஶித்துள்ளார் ஸ்வாமி. ஸ்வாமியினுடைய ஒவ்வொரு க்ரந்தத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள ஒரு ஜன்மம் போதாது என்றுதான் சொல்லவேண்டும்.

ஸ்வாமி தேஶிகனின் படைப்புகளில் **யாதவாப்யுதயம்** என்ற காவ்யமானது சொற்களால் வர்ணிக்க முடியாத அளவிற்கு **वाचामगोचर வாசாம கோசரமானது** என்று ஆசார்யர்கள், அறிஞர்கள் முதலானவர்களின் அநுபவம். பொதுவாக ஶாஸ்த்ரங்கள், மதங்கள் ஸ்வமதஸ்தாபனம் பண்ணுவதற்காகவே தோன்றியவைகள். அப்படி

அந்தந்த மதங்களைச் சார்ந்த ஆசார்யர்களும், பெரியவர்களும் அதற்காகவே பாடுபட்டார்கள் என்பதை அந்தந்த நூல்களின் வாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகிறது. ஆனால் ஒரு மதத்தைச் சேர்ந்தவர் மற்ற மதத்தவர் இயற்றிய க்ரந்தத்தைப் பற்றி மனதாரப் பாராட்டுவது என்பது மிகவும் அரிது. ஆகையினாலேயே **ध्वन्यालोक ग्रन्थकर्ता**வான **आनन्दवर्द्धनाचार्य**ர் நல்ல உள்ளம் படைத்தவர்களின் மனது ஸந்தோஷப்படவேண்டுமென்பதற்காக இந்த நூலை இயற்றுகிறேன் என்று கூறுகிறார். தத்வஞானம் தெரிந்தவர்கள் பாராட்டைப் பெற்றால் அந்நூல் மிகச்சிறந்ததாக விளங்கும். பொதுவாக, பாராட்டுகளைப் பெறுவதற்காக காவ்யங்களை இயற்றுவது கவிஞர்களின் இயல்பு. எவ்வித எதிர் பார்ப்புமில்லாமல் எம்பெருமான் திருவுள்ள உகப்பிற்காக அவனுடைய அவதாரத்தையும், சேஷ்டிதங்களையும் யாதவாப்யுதய க்ரந்தத்தில் அருளிச் செய்துள்ளார் ஸ்வாமி. விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தரீதியாக அமைந்துள்ள இந்த மஹா காவ்யத்திற்கு அத்வைதமத பண்டிதரான ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதர் வ்யாக்யானம் இயற்றியுள்ளார்.

## ஸ்ரீமத் அப்பைய தீக்ஷிதர்:

அப்பைய தீக்ஷிதர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூருக்கு அடுத்துள்ள திரிவிரிஞ்சிபுரம் என்னும் ஊரில் 1520ல் பிறந்தார். இவருடைய தந்தை இரங்கராஜ தீக்ஷிதர். இவர் இளம்வயதில் ஶிவதீக்ஷை பெற்று ஶிவமூலமந்த்ரத்தை முறைப்படி ஓதுபவராகயிருந்தார்.

## தீக்ஷிதரின் காலம்:

தீக்ஷிதரின் காலம் 1520-1593 வரை. இவர் சிறந்த அத்வைத வேதாந்த பண்டிதராக திகழ்ந்தவர். ஶிவதத்துவத்தையும், அத்வைத மதத்தையும்

மக்களிடையே சேர்க்கவேண்டும் என்பதற்காக தொண்டர்களைத்திரட்டி ஒரு இயக்கமே நடத்தியுள்ளார். வாத-விவாதங்களில் தமது புலமையை நிலைநாட்டி தமிழ்நாடெங்கும் கொண்டாடப்பட்ட இவரது புகழ் வடநாட்டிலும் காசி வரை பரவியிருந்தது. இவர் இந்து மதத்தின் அடிப்படையான கருமம், பக்தி, ஆத்மஞானம் இவை மூன்றிற்கும் முன் உதாஹரணமாக வாழ்ந்தவர்.

**மதத்தின் பார்வை:**

வைணவ மதத்திற்கும் ஶைவமதத்திற்கும் ஸித்தாந்த அடிப்படையில் பல கருத்துவேறுபாடுகளும், வாத-விவாத மோதல்களும் இவருடைய காலத்திற்குமுன் ஒரு நூற்றாண்டுகாலமாக இருந்துவந்தது. ஆனால் இந்த வாத-விவாதங்களெல்லாம் வேதத்தையும் புராணங்களையும் அடிப்படையாகக்கொண்டு வந்தவை. **ஆலோட்ய ஸர்வ ஶாஸ்த்ராணி** என்று ஶாஸ்த்ர கண்ணோட்டத்தில் மட்டுமே இவைகளைப் புரிந்து கொள்ளவேண்டுமென்று தமது ஸமநோக்குப் பார்வையை வெளியிட்டவர்.

**இயற்றிய நூல்கள்:**

தீக்ஷிதர் சிறுவயதிலேயே வேதாந்தம், இயல், இலக்கணம் முதலியவைகளை நன்கு கற்றுத் தேர்ந்தவராக விளங்கினார். வேதாந்த விமர்ஶனம், தத்துவம், பக்தி இலக்கியம் இவைகளை அடிப்படையாகக்கொண்டு 104 நூல்கள் எழுதியதாகவும், அவற்றில் 60 நூல்கள் மட்டுமே கிடைக்கப்பெறுவதாகவும் கூறப்படுகிறது. ப்ரஹ்மஸூத்ரத்தின் கருத்துக்களை எடுத்துக்காட்டும் வகையில் **சதுர்மதஸாரம்** என்ற நூலும் அத்வைதத்தைப் பற்றி **நயமஞ்சரி**, ஸ்ரீகண்ட மதத்தைப்பற்றி **நயமணிமாலை**, இராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பற்றி **நயமயூகமாலிகா**, மத்வ ஸித்தாந்தத்தைப் பற்றி **நயமுக்தாவளி** போன்ற க்ரந்தங்களை இயற்றியுள்ளார்.

இவருடைய வைதுஷ்யத்தையும், தொலைநோக்குப் பார்வையையும், உண்மையைத் தேடும் முயற்சியையும் பார்த்து ரசித்து வைணவமதத்தவரும், மத்வமதத்தவரும் **நயமயூகமாலிகா**, மற்றும் **நயமுக்தாவளி** ஆகிய இரண்டையும் தங்கள் மதநூல்களாக சேர்த்துக் கொண்டனர்.

### தீக்ஷிதர் போற்றும் யாதவாப்யுதயம்:

சிறந்த அத்வைதியான தீக்ஷிதர் தமது மத ஸித்தாந்தப் படி ப்ரஹ்மத்திற்கு நிர்குணம் சொல்லப்பட்டாலும் கார்யாவஸ்தையில் உபாஸிப்பதற்கு ஸகுணம் தேவைப்படுகிறது.

आरोग्यं भास्करादिच्छेत् श्रियमिच्छेत् हुताशनात् ।
शङ्करात् ज्ञानमन्विच्छेत् मोक्षमिच्छेज्जनार्दनात् ॥

**ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் ஶ்ரியமிச்சேத் ஹுதாஶநாத் ।**
**ஶங்கராத் ஞாநமந்விச்சேத் மோக்ஷமிச்சேஜ்ஜநார்தநாத் ॥**

என்ற ஶ்லோகத்தின்படி ஆரோக்யத்திற்கும் ஐஶ்வர்யத்திற்கும், ஞானத்திற்கும் ஒவ்வொரு மூர்த்தியாகக் கூறினாலும் மோக்ஷத்திற்கு நாராயண மூர்த்தியே சொல்லப்பட்டுள்ளது, இப்படி, பலவிஷயங்களை ஆலோசித்து யாதவாப்யுதய க்ரந்தத்தை நன்றாக அநுபவித்து வ்யாக்யானம் எழுதியுள்ளார். தீக்ஷிதருடைய மேதாவிலாஸத்தைப் பற்றி-

अप्पय्यदीक्षितानामद्भुतविज्ञानरचनशक्त्यादि ।
श्रीवीरराघवार्यो वैष्णव इत्थं समग्रहीत् वात्स्यः ॥

**அப்பய்யதீக்ஷிதாநாமத்புதவிஜ்ஞாநரசநஶக்த்யாதி ।**
**ஸ்ரீவீரராகவார்யோ வைஷ்ணவ இத்தம் ஸமக்ரஹீத் வாத்ஸ்ய: ॥**

என்று **உத்தமூர் ஸ்வாமி** ஸாதித்துள்ளார்.

## ஸ்ரீமதாண்டவன் த்ருஷ்டியில் தீக்ஷிதர்:

தீக்ஷிதருடைய பாண்டித்யத்தையும், அவர் இயற்றிய யாதவாப்யுதய க்ரந்தத்தின் மற்றும் வ்யாக்யானத்தின் பெருமைகளையும், ஸ்வாமி தேஶிகனின் வைபவத்தையும் ஸ்ரீமதாண்டவன் மிக அழகாக ஸாதித்தாயிற்று. அப்படி ஸ்ரீமதாண்டவன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஸாதித்த **ஸ்ரீ தேஶிக வைபவ**த்தையும், ஸ்ரீபார்த்தஸாரதி ஸபாவில் மார்கழி இசைவிழாவைத் துவக்கி வைத்து அருளிய அநுக்ரஹபாஷணத்தையும் சிறிய ஞானத்தனான அடியேன் யதாஶக்தி, யதாமதி ஸங்க்ரஹித்து ஒரு நூல் வடிவமாக அமைத்து **தை உத்திராடம் திருநக்ஷத்திரத்தில்** ஸ்ரீமதாண்டவன் திருவடித்தாமரைகளில் ஸமர்ப்பிக்கின்றேன்.

ஸ்ரீமத் ஆண்டவன் திருவடிகளே சரணம்.

ந்யாய வேதாந்த வித்யாநிதி
காடந்தேத்தி திருச்சேறை
முனைவர்
**ஆஸூரி இராமாச்சார்யன்.**

For a very convenient stay at Thiruppullani
Srirangam Srimad Andavan Ashramam,
138, South Car Street,
Thiruppullani 623532

Contact: T.Raguveeradayal, In Charge
9443301091/9791626731 Whatsapp 9443301091

||ஸ்ரீ:||




தேசிக னென்னு மாசான் தெளிவொடு பொறுமைச் சீரும்
வீசிய கடல்நீரப் பாரில் விளைத்தபல் விநோதக் கூட்டும்
பேசிட வல்லார் யாரே?

**-- வண்ணச் சரபம் தண்டபாணி ஸ்வாமிகள்**

## ||ஸ்ரீ:||

## ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யரான ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவராஹமஹாதேஶிகன் சென்னை பல்கலைக்கழகத்தில் ஸாதித்த அநுக்ரஹபாஷணம்.

**श्रीमद्वेदान्तरामानुजमुनि करुणालब्ध वेदान्तयुग्मं**
**श्रीमत् श्रीवासयोगीश्वर गुरुपदयोरर्पित स्वात्मभारं ।**
**श्रीमत् श्रीरङ्गनाथाह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं**
**श्रीमत् वेदान्तरामानुज मुनिमपरं संश्रये देशिकेन्द्रम् ॥**

ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜமுநி கருணாலப்த வேதாந்தயுக்மம்
ஸ்ரீமத் ஸ்ரீவாஸயோகீஶ்வர குருபதயோரர்பித ஸ்வாத்மபாரம் /
ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதாஹ்வய முநிக்ருபயா ப்ராப்த மோக்ஷாஶ்ரமம் தம்
ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ முநிமபரம் ஸம்ஶ்ரயே தேஶிகேந்த்ரம் //

இந்தத் தனியன் இங்கே சொல்வதற்குக் காரணம் இந்த ஸ்வாமியிடம் தான் அடியேனுக்கு க்ரந்த சதுஷ்டயம் அந்வயமாயிற்று.

गुरुं प्रकाशयेत् धीमान् मन्त्रं यत्नेन गोपयेत् ।
अप्रकाश-प्रकाशाभ्यां क्षीयेते संपदायुषी ॥

**குரும் ப்ரகாஶயேத் தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத் ।**
**அப்ரகாஶ-ப்ரகாஶாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ ॥**

என்று நூற்றெட்டு ஸம்ஹிதைகளில் ஒன்றான **தேவ ஸம்ஹிதை** சொல்கிறது. இந்த ஶ்லோகத்தை ஸ்வாமி தேஶிகன் **குருபரம்பரா ப்ரபாவ**த்திலே மேற்கோள் காட்டுகிறார். ஆசார்ய அநுஸந்தானம் முக்கியமானது. **தேஶிகன்** என்ற ஶப்தத்திற்கே **ஆசார்யன்** என்று அர்த்தம். ஸம்ஸ்க்ருதத்தில்

**தேஶிகா** என்று ஒரு நிகண்டு உண்டு. இந்த ஆசார்ய பரம்பரையிலேயே ஸ்வாமி தேஶிகனுக்கு தனி இடம் உண்டு. ஏனென்றால், அநிதர ஸாதாரணமாக ஶாஸ்த்ரப்படி எப்படி வாழ வேண்டும், பகவானிடத்திலும், ஆசார்யனிடத்திலும் எப்படி பக்தி செய்யவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர் ஸ்வாமி. எம்பெருமானை **பத்துடையடியவர்க்கு எளியவன்** என்று ஆழ்வார் கொண்டாடுவதுபோல, ஆசார்யனும் ஶிஷ்யனிடத்தில் வாத்ஸல்ய பரிபூர்ணனாக இருக்கவேண்டும். இப்படி வாழ்ந்து காட்டி ஆசார்ய பரம்பரையிலேயே தனித்துவம் பெற்றவர் ஸ்வாமி தேஶிகன். **ஆசரதீதி ஆசார்ய: ஆஸமந்தாத் சரதீதி ஆசார்ய:** - ஆசார்ய லக்ஷணம் முழுமையாக பொருந்தியவர்கள் ஸ்வாமி தேஶிகனுக்கு முன்னும் இல்லை பின்னும் இல்லை என்று சொல்லலாம். அதேபோல ஶிஷ்ய லக்ஷணத்திற்கு ஆழ்வானே பூர்ணர், அவரே சிறந்த எடுத்துக்காட்டு. இருவரும் மிக உயர்ந்தவர்கள். குரு-ஶிஷ்ய பாவத்திலே எம்பெருமானாரிடத்திலே மிகவும் நெருக்கமாக இருந்தவர் ஸ்வாமி கூரத்தாழ்வான். அவர் க்ரந்தங்களே மிகவும் ஆஶ்சர்யமானவை. **யமக ரத்னாகரம், பஞ்சஸ்தவம்** என்று ஒவ்வொரு க்ரந்தமும் அத்யாஶ்சர்யமாக அருளிச்செய்த மஹாவ்யாகரண பண்டிதர் ஸ்ரீ கூரத்தாழ்வான். ஶிஷ்ய லக்ஷணம் பற்றி ஸ்வாமி தேஶிகன்

सद्बुद्धिः साधु सेवी समुचितचरितस्तत्वबोधाभिलाषी
शुश्रूषुस्त्यक्तमानः प्रणिपतनपरः प्रश्नकालप्रतीक्षः ।
शान्तो दान्तोऽनसूयुः शरणमुपगतः शास्त्रविश्वासशाली
शिष्य प्राप्तः परीक्षां कृतविदभिमतं तत्त्वतः शिक्षणीयः ॥

**ஸத்புத்தி: ஸாது ஸேவீ ஸமுசிதசரிதஸ்**
**தத்வபோதாபிலாஷீ**
**ஶுஶ்ரூஷுஸ்த்யக்தமாந:ப்ரணிபதநபர:**
**ப்ரஶ்நகாலப்ரதீக்ஷ: ।**
**ஶாந்தோ தாந்தோ஽நஸூயு: ஶரணமுபகத:**
**ஶாஸ்த்ரவிஶ்வாஸஶாலீ**
**ஶிஷ்ய ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவிதபிமதம்**
**தத்வத: ஶிக்ஷணீய: ॥**

என்று ஸாதித்தபடி ஆழ்வான் இருந்தார். ஸ்வாமி தேஶிகன் நமது ஸம்ப்ரதாயத்திலே சிறந்த ஆசார்யனாக விளங்கினார். **தேஶிக** ஶப்தத்தில் **தே** என்ற அக்ஷரம் **தேவ:** என்பதையும் **ஶி** என்ற அக்ஷரம் **ஶிஷ்ய:** என்பதையும் **க** என்பது **கருணை**யையும் குறிக்கும்.

देवानुग्रहधारित्वात् शिष्यानुग्रहकारणात् ।
करुणामयरूपत्वात् उच्यते देशिको बुधै: ॥
தேவாநுக்ரஹதாரித்வாத் ஶிஷ்யாநுக்ரஹகாரணாத் ।
கருணாமயரூபத்வாத் உச்யதே தேஶிகோ புதை: ॥

இது அடியேன் இயற்றிய ஶ்லோகம். தேஶிக ஶப்தத்தின் முதல் எழுத்து தே, **தேவ:** என்பதை குறிக்கும். **தேவ:** என்ற ஶப்தத்தை ஶாஸ்த்ரம் **தீவ்யதீதி தேவ:** என்றும் **ஶ்ரத்தயா தேவ: தேவத்வம் அஶ்நுதே** என்றும் பல விதமாக விளக்குகிறது. ஆசார்யர்கள் நமக்கு அநுக்ரஹம் செய்வதற்காகவே தோன்றியதால் தேஶிக ஶப்தத்தின் முதல் எழுத்து **தே** என்பதை **தேவ:** என்று சொல்வதுண்டு. ஶிஷ்யர்களுக்கு கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம், ப்ரபத்தி ஆகியவை பற்றிய ஞானத்தை வழங்கி அநுக்ரஹம் செய்கிறார் ஆசார்யன். ஞானம் என்பது எம்பெருமான் அநுக்ரஹிப்பது. கீதாசார்யன் சொல்கிறார்,

सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्त: स्मृतिर्ज्ञानमपोहनं च ।
वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृत् वेदविदेव चाहम् ॥

ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்த:
ஸ்ம்ருதிர்ஞானமபோஹநம் ச ।
வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ
வேதாந்தக்ருத் வேதவிதேவ சாஹம் ॥

ஆசார்யர்கள் ஶிஷ்யர்களுக்கு அருளவேண்டும் என்பதற்காகவே எம்பெருமானிடத்திலே ஞானத்தைப் பெற்றிருக்கிறார்கள். இதுதான் **ஶிஷ்யானுக்ரஹ காரணாத்** என்பதன் பொருள். **கார்யநியத பூர்வ வ்ருத்தி காரணம்** என்றபடி ஶிஷ்யனுக்கு அருளுவதற்கு முன்னரே எம்பெருமானிடத்திலே ஆசார்யன் அநுக்ரஹம் பெற்றுக்கொள்கிறார். இந்த காரணம் எப்படிப்பட்டதென்றால் **கருணாமய ரூபத்வாத். பர துக்க துக்கித்வம் தயை** என்று சொல்வார்கள். அதுபோல் ஶிஷ்யர்களிடத்திலே தயையுடன் இருக்கக் கூடியவர்கள் ஆசார்யர்கள். காரிகாவளி க்ரந்தகர்த்தா ஶிஷ்யனிடத்தில் ஏற்பட்டுள்ள கருணையினால் இந்த க்ரந்தத்தைச் செய்கிறேன் என்பதை **ராஜீவ தயா வஶம் வத**: என்று கூறுகிறார். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் குருவுக்கு தான் தெய்வத்தை விட ப்ராதான்யம்.

अधिष्ठानं तथा कर्ता करणं च पृथग्विधम्।
विविधाश्च पृथक्चेष्टा दैवं चैवात्र पञ्चमम्॥

**அதிஷ்டாநம் ததா கர்த்தா கரணம் ச ப்ருதக்விதம் ।**
**விவிதாஶ்ச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம் ॥**

என்று கீதாச்சார்யன் சொல்கிறார். இவ்வாறு

ஒரு ஸதாசார்யனை ஆஶ்ரயித்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு அநுக்ரஹம் பண்ணுகிறான் எம்பெருமான்.

ஒரு தனியன் என்றால் அந்த ஆசார்யன் யாரிடத்திலே க்ரந்த காலக்ஷேபங்கள் பண்ணிக் கொண்டார், யாரிடம் மந்த்ரோபதேஶம் பெற்றுக் கொண்டு பரஸமர்ப்பணம் செய்துகொண்டார், ஸந்யாஸியாக இருந்தால் எங்கே ஸந்யாஸ ஆஶ்ரமம் ஸ்வீகரித்துக் கொண்டார் என்ற அனைத்தும் இருக்க வேண்டும். ஸ்வாமி தேஶிகனுக்கு நான்கு தனியன்கள் உண்டு: வடமொழியிலே மூன்று, தமிழிலே ஒன்று. வடமொழி, தமிழ்மொழி இரண்டுமே வேண்டும் நமக்கு. இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலே தான் வடமொழியையும் தமிழ்மொழியையும் ஸம்பந்தப் படுத்தி விவரணம் பண்ண வேண்டும் என்ற ஒரு வ்யவஹாரம் ஏற்பட்டது.

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥
ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥
जीवनं जगतां जीयात् किमप्यपगतस्पृहम् ।
स्वतन्त्रं सर्वतन्त्रेषु वेङ्कटेशाह्वयं महः ॥
ஜீவநம் ஜகதாம் ஜீயாத் கிமப்யபகதஸ்ப்ருஹம் ।
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேங்கடேஶாஹ்வயம் மஹ: ॥

**ஸ்வாமி தேஶிகனின் க்ரந்தங்கள்:**

அடியேன் ஒரு தனியன் ஸ்வாமி தேஶிகனுக்குச் செய்தேன்.

सांख्यसौगतचार्वाकशङ्करादितमोनुदम् ।
त्रय्यन्तदेशिकं वन्दे वेङ्कटेशाह्वयं महः ॥

**ஸாங்க்யஸௌகதசார்வாகஶங்கராதிதமோநுதம் ।**
**த்ரய்யந்ததேஶிகம் வந்தே வேங்கடேஶாஹ்வயம் மஹ: ॥**
**ஸாங்க்ய** தத்வமானது ப்ரக்ருதி, புருஷன் இரண்டு தான் என்று சொல்லிவிட்டது. எந்த மதமானாலும் தனக்கு அப்பாற்பட்ட ஶக்தி உண்டு என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று ஶாஸ்த்ர, வேதாந்த ப்ரமாணங்களைக் கொண்டு ஜீவ தத்வம் வேறு, ஈஶ்வர தத்வம் வேறு என்று நிரூபித்து, நமது ஸம்ப்ரதாயத்தை நிலை நிறுத்தியவர் ஸ்வாமி தேஶிகன். **ஸௌகதம்** என்பது பௌத்த மதம், அவர்கள் ஶ்ருதிவாக்யங்களையோ ஸூத்ரங்களையோ ஒத்துக்கொள்ள மாட்டார்கள். **சாருவாக** மதத்தவர்கள் ப்ரத்யக்ஷமான விஷயங்களை மட்டுமே நம்புபவர்கள். **ஶங்கராதி தமோநுதம்**- அவர் இருட்டுவலையை விரித்தார், ஸ்வாமி அதை நீக்கிவிட்டார். **ஸர்வ ஶாஸ்த்ரார்த்த தத்வஜ்ஞன்** என்று ஸ்வாமிக்கு ஒரு பட்டமுண்டு. **த்ரையந்த தேஶிகம் வந்தே** – மூன்று வேத ஸாரங்களின் அர்த்தத்தை சொல்லக்கூடியவரான அந்த தேஶிகனை வணங்குகிறேன். அவர் எப்படிப் பட்டவரென்றால், **வேங்கடேஶாஹ்வயம் மஹ: -** வேங்கடேஶன் என்று எல்லோராலும் அழைக்கக்கூடிய பெருமை வாய்ந்தவர்.

**ஸர்வதர்ஶந ஸங்க்ரஹம்** என்ற க்ரந்தம் மிகவும் முக்கியமானது, ஶப்தபங்க்தி ந்யாயப்படி இவ்விஷயங்களை ஆராய்ந்து கொடுப்பது. எந்த ஒரு ஶாஸ்த்ரத்தையும் மேம்புல் மேய்வது போல் கற்காமல் நன்கு ஆராய்ந்து கற்கவேண்டும். ஸமீக்ஷாத்மகம் துல்யம் வேத்தி வித்யா என்று சொல்வார்கள்.

शुश्रूषा श्रवणं चैव ग्रहणं धारणं तथा ।
ऊहापोहार्थविज्ञानं तत्त्वज्ञानं च धीगुणाः॥

ஶுஶ்ரூஷா ஶ்ரவணம் சைவ க்ரஹணம் தாரணம் ததா ।
ஊஹாபோஹார்த்தவிஜ்ஞானம் தத்வக்ஞானம் ச தீகுணா: ॥
என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி எந்த ஒரு விஷயத்திலும் ஞானாந்வேஷணம் வரவேண்டும். ஸ்வாமி தேஶிகன் திருநாமத்தை மட்டுமே அநுஸந்திப்பதைவிட அவர் அநுக்ரஹித்த க்ருதிகளின் இலக்கண, இலக்கிய விஷயங்களைக் கற்று அனுபவித்து அவரது மேன்மையையும் அனுபவித்து உணர வேண்டும். ஸ்வாமி தேஶிகனைப் பற்றி இவ்வாறு தான் தெரிந்து கொள்ளவேண்டும். இப்போது இருப்பது போல அப்போது வஸதிகள் இல்லை - வித்யுத் தீபங்களோ, வித்யுத் வ்யஜனங்களோ கிடையாது, ஓலைச் சுவடியும், எண்ணெய் விளக்குகளும் மட்டும்தான். அதைக்கொண்டு மிகவும் ஶ்ரமப்பட்டு ஓலைச் சுவடியிலே எழுதினார்கள்.

प्रातर्द्यूतप्रसङ्गेन मध्याह्ने स्त्रीप्रसङ्गत: ।
रात्रौ चौर्यप्रसङ्गेन कालो गच्छत्यधीमताम् ॥
**ப்ராதர்த்யூதப்ரஸங்கேந மத்யாஹ்நே ஸ்த்ரீப்ரஸங்கத: ।**
**ராத்ரௌ சௌர்யப்ரஸங்கேந காலோ கச்சத்யதீமதாம் ॥**
அதாவது, காலையில் சூதாட்டத்திலும், மதியம் பெண்கள் விஷயத்திலும், இரவில் திருட்டுத்தொழிலிலும் காலத்தை வீணடிப்பார்கள் அறிவிலிகள். அறிஞர்கள் அறிவுடையவர்கள் காலையில் மஹாபாரதக் கதை கேட்பதிலும், மதியம் ஸீதாதேவியின் சரிதமான இராமாயணக் கதை கேட்பதிலும், இரவில் நவநீத சோரனான ஸ்ரீகிருஷ்ணனுடைய கதையைக் கேட்டும் காலத்தைக் கழிப்பார்கள்.

வ்யாகரணம், ந்யாய ஶாஸ்த்ரம், மீமாம்ஸா ஶாஸ்த்ரம் இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு

தான் வேதாந்தம் கற்கவேண்டும். **தத்-த்வம்-அஸி** என்று ஸமானாதிகரண பேதங்கள் இதர மதங்களில் நிறைய உண்டு. வைஷ்ணவ மதத்திலே தான் **தத்-த்வம் - அஸி**க்கு ஸமானாதிகரணம். ஏகாதிகரண வ்ருத்தித்வமும் வர வேண்டும். இதற்கு ஸ்ரீபாஷ்யகாரர் **வேதார்த்த ஸங்க்ரஹத்திலே**, ஶாஸ்த்ர ஜன்யம் வித்யா, ப்ரமாதா வித்யா, என்று ஆசார்யன் சொல்கிற வாக்கு தான் நித்யம் என்று நிறைய கண்டனம் பண்ணுகிறார். **பரே து, அபரே து, அந்யே து** என்றெல்லாம் சொல்கிறார். இவற்றை ஸ்வாமி தேஶிகன் ஒவ்வொரு க்ரந்தத்திலும் விளக்கியுள்ளார். ஸ்வாமி ஸாதிக்கிறார்,

निर्विष्टं यतिसार्वभौमवचसामावृत्तिभिर्यौवनं
निर्धूतेतरपारतन्त्र्यनिरया नीतास्सुखं वासरा: ।
अङ्गीकृत्य सतां प्रसत्तिमसतां गर्वोऽपि निर्वापित:
शेषायुष्यपि शेषिदंपतिदयादीक्षामुदीक्षामहे ॥

**நிர்விஷ்டம் யதிஸார்வபௌமவசஸாமா**
**வ்ருத்திபிர்யௌவநம்**
**நிர்தூதேதரபாரதந்த்ர்யநிரயா**
**நீதாஸ்ஸுகம் வாஸரா: ।**
**அங்கீக்ருத்ய ஸதாம் ப்ரஸத்திமஸதாம்**
**கர்வோऽபி நிர்வாபித:**
**ஶேஷாயுஷ்யபி ஶேஷிதம்பதி**
**தயாதீக்ஷாமுதீக்ஷாமஹே ॥**

जयति सकलविद्यावाहिनी जन्मशैलो
जनिपथपरिवृत्तिश्रान्तविश्रान्तिशाखी ।
निखिलकुमति माया शर्वरी बालसूर्यो
निगमजलधिवेला पूर्णचन्द्रो यतीन्द्र: ॥

ஜயதி ஸகலவித்யாவாஹிநீ ஜந்மஶைலோ
ஜநிபதபரிவ்ருத்திஶ்ராந்தவிஶ்ராந்திஶாகீ ।
நிகிலகுமதி மாயா ஶர்வரீ பாலஸூர்யோ
நிகமஜலதிவேலா பூர்ணசந்த்ரோ யதீந்த்ர: ॥
கிருஷ்ணரே ராமானுஜர், ராமானுஜரே கிருஷ்ணர்.
அப்படி,
शमितोदयशङ्करादिगर्व:
स्वबलादुद्धृतयादवप्रकाश: ।
अवरोपितवान् श्रुतेरपार्थान्
ननु रामावरज: स एष भूय: ॥
**ஶமிதோதயஶங்கராதிகர்வ:**
**ஸ்வபலாதுத்ருதயாதவப்ரகாஶ: ।**
**அவரோபிதவாந் ஶ்ருதேரபார்த்தாந்**
**நநு ராமாவரஜ: ஸ ஏஷ பூய: ॥**

என்றது ராமானுஜ வைபவம். ராமானுஜர் பற்றி ஸ்வாமி தேஶிகன் அநுக்ரஹித்த **யதிராஜ ஸப்ததி**யில் ஒவ்வொரு ஶ்லோகமும் ரத்னம். விருத்தமில்லாமல் வ்ருத்தம் பண்ணக்கூடியவர் ஸ்வாமி தேஶிகன். ஆங்கிலத்தில் prosody, etimology என்று சொல்லப்படும் வ்ருத்தம் அவருக்கு கைவந்த கலை. வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா என்ற தமிழ் வ்ருத்தங்களிலும் ஸம்ஸ்க்ருத வ்ருத்தங்களிலும் கை தேர்ந்தவர் ஸ்வாமி. அவரது தேஶிக ப்ரபந்தத்திலும் ஸம்ஸ்க்ருத க்ருதியிலும் இவை நன்றாக விளங்கும். ஸாஹித்ய வல்லுனர்கள் காவ்ய லக்ஷணங்களாக சொல்வது

सदोषौ सगुणौ सालङ्कारौ शब्दार्थौ काव्य लक्षणम्
शब्दार्थशरीरं तावत् काव्यम् ।

सर्गबन्धो महाकाव्यम् उच्यते तस्य लक्षणम् ।
आशीर्नमस्क्रिया वस्तुनिद्रे3शो वापि तन्मुखम् ।

**ஸதோஷௌ ஸகுணௌ ஸாலங்காரௌ**
**ஶப்தார்த்தௌ காவ்ய லக்ஷணம்**
**ஶப்தார்த்தஶரீரம் தாவத் காவ்யம் ।**
**ஸர்கபந்தோ மஹாகாவ்யம் உச்யதே தஸ்ய லக்ஷணம் ।**
**ஆஶீர்நமஸ்க்ரியா வஸ்துநித்ரேஶோ வாபி தந்முகம் ।**

இப்படி தன் க்ரந்தங்களை இதர மதத்தவர்களும் ஏற்றுக்கொள்ளும்படியான கவித்திறமை ஸ்வாமிக்கு உண்டு. தார்க்கிகர்களுக்கு தார்க்கிகராகவும், ஸௌலப்யமாகவும், க்ருபாமாத்ர ப்ரஸன்னாச்சார்யராகவும் இருப்பவர் ஸ்வாமி.

ஸ்வாமி தேஶிகன் பண்ணிய க்ரந்தங்களைப் பட்டியலிடுவதற்கே ஒரு மணி நேரம் ஆகும். **आकारो ह्रस्वः कीर्तिश्च महती ஆகாரோ ஹ்ரஸ்வ: கீர்த்திஶ்ச மஹதீ** என்று சொல்லிக்கொண்டு போகலாம். வேதாந்த க்ரந்தங்கள், காவ்ய க்ரந்தங்கள், ஸ்தோத்ர க்ரந்தங்கள், ஸம்ப்ரதாய க்ரந்தங்கள், வாத க்ரந்தங்கள், எனப் பல க்ரந்தங்களை அருளிச்செய்துள்ளார். இவையெல்லாம் **அநுப்ரவிஶ்ய குருதே யத்ஸமேஹிதம் அச்யுதா** என்றபடி எம்பெருமானே ஸ்ரீ ஶடகோபராக, ஸ்ரீ ஆளவந்தாராக, பகவத்ராமானுஜராக, ஸ்வாமி தேஶிகனாக திருவவதாரம் செய்தபடியால் நமக்கு கிடைத்துள்ளது. அதாவது,

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम्॥

**யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத ।**
**அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥**

எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்து அதர்மம் தலை ஓங்குகிறதோ அப்போது நான் அவதரித்துக் கொள்கிறேன் என்று சொன்னார் கீதாசார்யன்.

அதன்படி, **வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே** என்று பீதகவாடை பிரானார் பிரமகுருவாகிவந்து ப்ரதமாசார்யனான கீதாசார்யனே ஸ்வாமி தேஶிகனாகத் திருவவதாரம் பண்ணினார். அதனாலேதான் **வேங்கடேஶாவதாரோயம்** என்று குமாரவரதாச்சாரியார் அருளிச்செய்துள்ளார். திருவேங்கடமுடையான் அவதாரமே ஸ்வாமி தேஶிகன். அவர் மஹாகாவ்யங்கள், ஸ்தோத்ர காவ்யங்கள், இவை தவிர, சில்லரை ரஹஸ்யங்கள், ரஹஸ்யத்ரய ஸாரம் போன்ற க்ரந்தங்கள் அருளிச்செய்துள்ளார். இதில் ரஹஸ்யம் என்றால் என்னவென்று ஒரே ஶ்லோகத்தில் சில்லரை ரஹஸ்யத்திலே ஸாதிக்கிறார்,

प्रसादात् देशिकेन्द्राणां परावरविभागवित् ।
प्रपन्न: परमात्मानं प्राप्नोति परमं पदम् ॥

**ப்ரஸாதாத் தேஶிகேந்த்ராணாம் பராவரவிபாகவித் ।**
**ப்ரபந்ந: பரமாத்மாநம் ப்ராப்நோதி பரமம் பதம் ॥**

இந்த ஒரு அனுஷ்டுப் ஶ்லோகத்திலேயே சித், அசித், ஈஶ்வர தத்வம் அனைத்தையும் அடக்கிவிட்டார் ஸ்வாமி. வ்யாகரணத்திலே சொல்வதுண்டு,

अल्पाक्षरमसन्दिग्धं सारवद्विश्वतो मुखम् ।
अस्तोभमनवद्यञ्च सूत्रं सूत्रविदो विदु: ।

**அல்பாக்ஷரமஸந்திக்தம் ஸாரவத்விஶ்வதோ முகம் ।**
**அஸ்தோபமநவத்யஞ்ச ஸூத்ரம் ஸூத்ரவிதோ விது: ।**

என்பது ஸூத்ர லக்ஷணம்.

இப்படி சுருங்கச் சொல்வது ஸூத்ரமாகவும், விரித்துச் சொல்வது பாஷ்யமாகவும் இருக்கவேண்டும்.

पदच्छेद: पदार्थोक्ति:
विग्रहो वाक्ययोजना ।
आक्षेपस्य समाधानम्
व्याख्यानं पञ्चलक्षणम् ॥

**பதச்சேத: பதார்த்தோக்தி: -**
**விக்ரஹோ வாக்யயோஜநா ।**
**ஆக்ஷேபஸ்ய ஸமாதாநம்**
**வ்யாக்யாநம் பஞ்சலக்ஷணம் ॥**
இப்படி ஒவ்வொரு க்ரந்தத்திலும் ஸ்வாமியினுடைய பெருமை விளங்கும்.

**ஸ்ரீராமாயணத்திற்கு ஸமானம் ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரம், ஸ்ரீமத்பாகவதத்திற்கு ஸமானம் யாதவாப்யுதயம்**. கவிதார்க்கிக ஸிம்ஹமான ஸ்வாமி தேஶிகனுடைய கவிதைத் திறமை எப்படிப்பட்டது என்பதற்கு யாதவாப்யுதய க்ரந்தம் ஒன்றே போது மானது. ஸ்வாமியினுடைய யாதவாப்யுதயக்ரந்த மானது மோக்ஷம் கொடுக்கக்கூடிய ஸர்வேஶ்வர னுடைய கிருஷ்ணாவதாரத்தைப் பற்றிக் கூறுகிறது. அதனால் இது பரமபுருஷார்த்தத்தைக் கொடுக்கக் கூடிய க்ரந்தம். இவ்விஷயத்தை ஸ்வாமி முதல் ஸர்கத்தில் எட்டாவது ஶ்லோகத்தில் –

विहाय तदहं व्रीडां व्यासवेदार्णवामृतम् ।
वक्ष्ये विबुधजीवातुं वसुदेवसुतोदयम् ॥
**விஹாய ததஹம் வ்ரீடாம்**
**வ்யாஸவேதார்ணவாம்ருதம் ।**
**வக்ஷ்யே விபுதஜீவாதும் வஸுதேவஸுதோதயம் ॥**

வ்யாஸர் இயற்றிய வேதமான மஹாபாரதம் என்ற கடலிலிருந்து எடுக்கப்படும் ஸாரமான அமுதம் அதாவது தேவர்களுக்கும், வித்வான்களுக்கும் அன்னமுமான வஸுதேவருடைய குமாரரான கிருஷ்ணருடைய சரித்திரத்தைச் சொல்லுவேனாக என்று ஸாதிக்கிறார்.

இப்படி கிருஷ்ணனுடைய பெருமையைச் சொல்வதால் இந்த க்ரந்தத்தை மஹாபாரதம் என்றும் பாகவதத்தின் தஶம ஸ்கந்தத்தின் சுருக்கம் என்றும் கூறலாம்.

யாதவாப்யுதயத்தில் முதல் ஶ்லோகத்தில், நமஸ்காராத்மக மங்களத்தை **"வந்தே"** என்று ஆரம்பித்து இந்த க்ரந்தத்தை அருளிச்செய்துள்ளார்.

वन्दे बृन्दावनचरं वल्लवीजनवल्लभम् ।
जयन्तीसम्भवं धाम वैजयन्तीविभूषणम् ॥

**வந்தே ப்ருந்தாவநசரம் வல்லவீஜநவல்லபம் ।**
**ஜயந்தீஸம்பவம் தாம வைஜயந்தீவிபூஷணம் ॥**

ப்ரதம பதமாக "வந்தே" வரக்கூடாது என்று சிலர் சொல்வதுண்டு. **விஶிஷ்டாத்வைத நவமயூகமாலிகா** போன்ற பல உயர்ந்த க்ரந்தங்கள் எழுதிய வ்யாக்யான சக்ரவர்த்தியான **அப்பய்ய தீக்ஷிதரே** யாதவாப்யுதயம் ஒரு சிறந்த காவ்யம் என்று கொண்டாடுகிறார். அதனால் **"வந்தே"** என்ற பதம் ஶ்லோகாரம்பத்தில் வந்தால் தோஷமில்லை என்பது தெரிகிறது. பொதுவாக காவ்ய படைப்பின் நோக்கம் काव्यं यशसेऽर्थकृते **காவ்யம் யஶஸே ऽர்த்தக்ருதே** என்றபடி புகழுக்காகவும், பொருளுக்காகவும் இயற்றப்படுகிறது என்று கூறப்படுகிறது. அப்படி இல்லாமல் சொல்லப்பட்ட காவ்ய லக்ஷணங்களெல்லாம் பொருந்திய ஸ்வாமியினுடைய யாதவாப்யுதய க்ரந்தம் மஹாகாவ்யங்களில் சேரவில்லை என்ற சிலரின் கூற்று வியப்பாக இருக்கிறது. வக்த்ரு வைலக்ஷண்யம், விஷய வைலக்ஷண்யம், ப்ரபந்த வைலக்ஷண்யம் என்று எல்லாவிதத்திலும் மேன்மையான யாதவாப்யுதய க்ரந்தம் பஞ்சமஹாகாவ்யங்களைக் காட்டிலும்

மிகவும் உயர்ந்தது. மேலும், இந்த மூவுலகத்தையும் ஶ்ரிய:பதியான ஸ்ரீமந்நாராயணனே விளையாட்டாக ஸ்ருஷ்டித்துக் கொண்டான் என்பதை **ஸ்ரீமாந்** என்ற சொல்லைக்கொண்டு ஸ்வாமி தேஶிகன் மிக அழகாக வர்ணித்துள்ளார் –

क्रीडातूलिकया स्वस्मिन् कृपारूषितया स्वयम् ।
एको विश्वमिदं चित्रं विभु: श्रीमानजीजनत् ॥
**க்ரீடாதூலிகயா ஸ்வஸ்மிந் க்ருபாரூஷிதயா ஸ்வயம் ।**
**ஏகோ விஶ்வமிதம் சித்ரம் விபு: ஸ்ரீமாநஜீஜனத் ॥**

பகவாந் க்ருபை என்கிற வர்ணத்தில் லீலை என்கிற குச்சியைத் தோய்த்து மூவுலகம் என்ற சித்திரத்தை தன்னிடத்தில் தானே எழுதிக்கொண்டான் என்பது இந்த ஶ்லோகத்தின் கருத்து. இவ்வாறு எம்பெருமானைப் பற்றி சொல்வதால் முன்பு செய்யப்பட்ட மஹா காவ்யங்களைக் காட்டிலும் ஸ்வாமி தேஶிகன் அருளிச்செய்த யாதவாப்யுதயத்திற்கு ஏற்றம் அதிகம். முந்தைய மஹாகாவ்யங்களான ஶிஶுபாலவதம் போன்றவைகளில் छेकानुप्रास, लटानुप्रास சேகாநுப்ராஸ, லடாநுப்ராஸ அலங்காரங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருந்தாலும் श्रिय:पति श्रीमति शासितुं जगत् என்று எம்பெருமானைப் பற்றிக் கூறி யிருந்தாலும் நேரடியாக எம்பெருமானுடைய சரித்திரத்தையே வர்ணித்திருப்பது யாதவாப்யுதய க்ரந்தத்தில் தான். கேவலம் பகவதநுபவத்தையே கொண்டுள்ள பகவதநுபவ ஜனிதமான இது போன்ற காவ்யங்கள் மஹாஶ்ரேஷ்டமானவை. அதனால் தான் வெட்கத்தைவிட்டு, व्यासवेदार्णवामृतम्

வ்யாஸவேதார்ணவாம்ருதத்திலிருந்து எடுக்கப்பட்ட வஸுதேவஸுதனுடைய சரித்ரத்தை எழுதுவேனாக என்று தன்னைச் சொல்லிக்கொண்டார் ஸ்வாமி.
வ்யாகரணத்திலே,

साहित्यसंगीतकलाविहीनः साक्षात्पशुः पुच्छविषाणहीनः ।
तृणं न खादन्नपि जीवमानस्तद्भागदेयं परमं पशूनाम् ॥

**ஸாஹித்யஸங்கீதகலாவிஹீந: ஸாக்ஷாத்பஶு: புச்சவிஷாணஹீந: ।**
**த்ருணம் ந காதந்நபி ஜீவமாநஸ்தத்பாகதேயம் பரமம் பஶூநாம் ॥**

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு காவ்யத்தில் முதலில் ஸாஹித்யம் வேண்டும், மற்றவை இரண்டாம் பக்ஷம் தான். ஶப்தஶாஸ்த்ரத்தை எடுத்துக்கொண்டால் பொதுவாக எந்த ஶாஸ்த்ரத்திலும் ஶப்தார்த்தம் என்ன, சமத்காரார்த்தம் என்ன, என்று எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஸ்வாமி தேஶிகன் **ந்யாய ஸித்தாஞ்ஜனம்** என்று ஒரு க்ரந்தமும் **ந்யாய பரிஶுத்**தி என்று ஒரு க்ரந்தமும் பண்ணினார். ஸ்வாமியை நாம் நேரே தரிஶித்ததில்லை - அன்று நான் பிறந்திலேன். கர்ணாகர்ண பரம்பரையாக நமது பூர்வாசார்யர்கள் மூலமாக ஸ்வாமி தேஶிகனுடைய மஹிமைகளை நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். இப்போது ஸ்வாமி க்ரந்தரூபமாக எழுந்தருளியிருக்கிறார். அவரது பெருமைகளைப் பேசும்படி எம்பெருமான் நம்மை வைத்திருப்பதே பெரிய அநுக்ரஹம், அதுவே பெரும் பேறு.

ஸ்வாமி கடைசியில் **விரோத பரிஹாரம்** என்ற ஒரு க்ரந்தத்தைபண்ணினார்.**விரோதேபரிஹாரம்=விரோதி**

**பரிஹாரம்.** வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலே யார் யார் விரோதி என்று பட்டியலிட்டு விளக்கியிருக்கிறார் இந்த க்ரந்தத்தில். இதனை தமிழிலும் **பரமத பங்கம்** என்ற ப்ரபந்தமாக இயற்றியிருக்கிறார். ஸ்வாமி ப்ராக்ருத பாஷையிலும் க்ரந்தங்கள் அருளிச்செய்துள்ளார். அவர் உபயபாஷா பண்டிதர், பஹுபாஷா ஸாரக்ஞர்.

**ஸ்வாமியின் கவிதா மேன்மை:**

கவிதார்க்கிக ஸிம்ஹமான ஸ்வாமி தேஶிகன், काव्येषु माघ: कवि कालिदास: **காவ்யேஷு மாக: கவி காளிதாஸ:** என்று கவிகளில் சிறந்தவராக போற்றப்படும் மஹாகவி காளிதாஸனை விட மேலான கீர்த்தியும், கவிதா ஸாமர்த்யமும் உடையவர்.

कविता वनिता चैव स्वयमेवागता वरा।
बलादाकृष्यमाणा सा सरसा विरसा भवेत् ॥

**கவிதா வநிதா சைவ ஸ்வயமேவாகதா வரா ।**
**பலாதாக்ருஷ்யமாணா ஸா ஸரஸா விரஸா பவேத் ॥**

என்றபடி கவிதையானது இயற்கையாக வரவேண்டும். அப்படி ஸ்வாமிக்குக் கவித்வமானது தானாக வந்தமை. அதற்கு காரணம் ஸ்ரீஹயக்ரீவர் கடாக்ஷமே என்று ஸாதிக்கிறார் ஸ்வாமி -

विशुद्ध विज्ञान घन स्वरूपं
विज्ञान विश्राणन बद्धदीक्षम् ।
दयानिधिं देहभृतां शरण्यं
देवम् हयग्रीवमहं प्रपद्ये ॥

**விஶுத்த விஜ்ஞாந கந ஸ்வரூபம்**
**விஜ்ஞாந விஶ்ராணந பத்ததீக்ஷம் ।**
**தயாநிதிம் தேஹப்ருதாம் ஶரண்யம்**
**தேவம் ஹயக்ரீவமஹம் ப்ரபத்யே ॥**

என்று ஞானவடிவமானவனும், விஶேஷ ஞானத்தை

அருளுவதற்காகவே விரதம் பூண்டவனும், கருணைக்கு இருப்பிடமானவனுமான அந்த ஸ்ரீஹயக்ரீவனுடைய அநுக்ரஹமும், ஆசார்ய அநுக்ரஹமும், ராமாநுஜ தயாபாத்ரபூதரான ஸ்வாமிக்கு ஒருங்கே இருந்ததால் கல்வியானது இவருக்கு வஶப்பட்டிருந்தது என்றே கூற வேண்டும்.

ஸ்வாமி தேஶிகனின் தமிழ் ப்ரபந்தங்களாகட்டும், வடமொழி க்ரந்தங்களாகட்டும் இலக்கண லக்ஷணங் களோடு கூடியவை. இப்படி ஸம்ஸ்க்ருதம், த்ராவிடம் என்று உபய கலை வல்லுனர் ஸ்வாமி. **கௌஶலன்** –திறமையானவர், என்று பட்டம் உண்டு ஸ்வாமிக்கு. அவர் எழுத்திலும், பேச்சிலும் ஆற்றல் மிகுந்தவராகத் திகழ்ந்தார். இவர் ஒவ்வொரு ப்ரபந்தத்திற்கும் வைக்கும் பெயரே அதிஶயமாக இருக்கும்.

யாதவாப்யுதயத்திற்கு மஹா அத்வைதியான அப்பய்ய தீக்ஷிதர் அத்யாஶ்சர்யமான வ்யாக்யானம் இட்டருளியுள்ளார். ஸ்வாமிதேஶிகன் யாதவாப்யுதத்தில் நான்காவது ஸர்கத்தில் பூதனா வதத்தை ஒரே ஶ்லோகத்தில் முடித்தார்.

स्तन्येन कृष्ण सह पूतनायाः प्राणान् पपौ लुप्तपुनर्भवायाः ।
यदद्भुतं भावयतां जनानां स्तनन्धयत्वं न पुनर्बभूव ॥

**ஸ்தந்யேந க்ருஷ்ண ஸஹ பூதநாயா:**
**ப்ராணாந் பபௌ லுப்தபுநர்பவாயா: ।**
**யதத்புதம் பாவயதாம் ஜநாநாம்**
**ஸ்தநந்தயத்வம் ந புநர்பபூவ ॥**

தாயைப் போல் பால்கொடுத்து கண்ணனை அழிக்க வந்த பூதனையின் பாலைப் பருகும் போது உழலை பேச்சி முலையோடு உயிர்சக உண்டு, அவள் மறுபிறவி பிறவாதபடி மோக்ஷமளித்தான். பகைவரிடமும் தாய்க்கு மகன் செய்யும் நன்மைபோல **ரீபூணாமபி வத்ஸல**னாக

அநுக்ரஹம் பண்ணினான் கண்ணன்.
அதுமட்டுமல்ல, **பகாஸுரவதம்,**
सपक्षकैलासनिभस्य गोपा बकस्य पक्षान् अभितो बबन्धु: ।
वने तदन्यानपि घोरवृत्तीन् क्षेप्तुं प्रवृत्ता इव केतुमाला: ॥
ஸபக்ஷகைலாஸநிபஸ்ய கோபா
பகஸ்ய பக்ஷாந் அபிதோ பபந்து: ।
வநே ததந்யாநபி கோரவ்ருத்தீந்
க்ஷேப்தும் ப்ரவ்ருத்தா இவ கேதுமாலா: ॥
கைலாஸமலை போன்று இறக்கைகளுடன் கூடின பகாஸுரனைக் கண்ணன் கொன்றான். அவனது சிறகுகளைக் கோபர்கள் தோரணமாகக் கட்டித் தொங்கவிட்டார்கள்.
**ஶகடாஸுரவதம்,**
स शायित: क्षेमविदा जनन्या पर्यङ्किकायां प्ररुदन् ।
चिक्षेप तुङ्गं शकटं पदाभ्यां गाढाभिघातेन गिरीन्द्रसारम् ॥
**ஸ ஶாயித: க்ஷேமவிதா ஜநந்யா**
**பர்யங்கிகாயாம் ப்ரருதந் ।**
**சிக்ஷேப துங்கம் ஶகடம் பதாப்யாம்**
**காடாபிகாதேந கிரீந்த்ரஸாரம்॥**
மலைபோல் உயர்ந்த ஒரு அஸுரன் சகடம் உருவில் வுருண்டு வந்ததை குழந்தையான கண்ணன் கால் களால் உதைத்து தூரத்தில் விழும்படி செய்தான். அது பலவாறாகச் சிதறியது.
இப்படி ஒவ்வொன்றையும் அத்யாஶ்சர்யமாக ஒரே ஶ்லோகத்தில் முடித்துள்ளார். ஒரு மஹாகாவ்யத்தின் லக்ஷணமாவது,
नगरार्णवशैलर्तुचन्द्रार्कोदयवर्णनम् ।
उद्यानसलिलक्रीडामधुपानरतोत्सवा: ॥
विप्रलम्भो विवाहश्च कुमारोदयवर्णनम् ।

मन्त्रद्यूतप्रयाणाऽऽजिनायकाभ्युदया अपि ॥
एतानि यत्र वर्ण्यन्ते तन्महाकाव्यमुच्यते ।
एषामष्टादशानां यैः कैश्चिदूनमपीष्यते ॥
**நகரார்ணவஶைலர்துசந்த்ரார்கோதயவர்ணநம் ।**
**உத்யானஸலிலக்ரீடாமதுபாநரதோத்ஸவா: ॥**
**விப்ரலம்போ விவாதஶ்ச குமாரோதயவர்ணனம் ।**
**மந்த்ரத்யூதப்ரயாணாஜிநாயகாப்யுதயா அபி ॥**
**ஏதாநி யத்ர வர்ண்யந்தே தன்மஹாகாவ்யமுச்யதே ।**
**ஏஷாமஷ்டாதஶாநாம் யை: கைஶ்சிதூனமபீஷ்யதே ॥**
இப்படி காவ்யம், கத்யம், பத்யம் என்ற ஒவ்வொரு இலக்கியத்திற்கும் அதற்கான லக்ஷணங்கள் சொல்லப் பட்டிருக்கிறது. இதிலே பாவம், வ்ருத்தி, ரீதி என்னவென்றெல்லாம் சொல்லுவார்கள் ஸாஹித்ய காரர்கள். இவற்றையெல்லாம் அனுஸரித்து ஒரு இலக்கியத்தை படைக்க வேண்டும். உதாரணமாக சித்ரம் என்றால் ஶப்தசித்ரம், அர்த்தசித்ரம், உபயசித்ரம் என்று மூன்றையும் பார்க்கவேண்டும்.

जगज्जननरक्षणक्षपणसङ्गिनो रङ्गिणः
पवित्रतममाद्रिये भगवतः पदत्रद्वयम् ।
शिवत्वकरणक्षमत्रिदिवसिन्धुसम्बन्धिनं
प्रधाव्य चरणं निजं प्रणिदधाति यत्र प्रभुः ॥
**ஜகஜ்ஜநநரக்ஷணக்ஷபணஸங்கிநோ ரங்கிண:**
**பவித்ரதமமாத்ரியே பகவத: பதத்ரத்வயம் ।**
**ஶிவத்வகரணக்ஷமத்ரிதிவஸிந்துஸம்பந்திநம்**
**ப்ரதாவ்ய சரணம் நிஜம் ப்ரணிததாதி யத்ர ப்ரபு: ॥**
இந்த ஶ்லோகத்தில் இருப்பது ஶப்தசித்ரம்.
क्षोणीरक्षणदक्षदक्षिणभुजे दाक्षिण्यदीक्षागुरौ
श्रेयः सद्मानि धन्यजन्मनि जगदेवे जगद्दातरि ।

वर्तन्ते विदुषां गृहा: प्रतिदिनं गन्धेभगन्धर्वयोर् -
आलानदृमरज्जुदामघटनाव्यग्रीभवत्किंकरा: ॥

க்ஷோணீ ரக்ஷணதக்ஷதக்ஷிணபுஜே
தாக்ஷிண்ய தீக்ஷாகுரௌ
ஶ்ரேய: ஸத்பாநி தந்யஜந்மநி
ஜகதேவே ஜகத்தாதரி ।
வர்தந்தே விதுஷாம் க்ருஹா: ப்ரதிதிநம்
கந்தேபகந்தர்வயோர்-
ஆலானத்ருமரஜ்ஜுதாமகடனா
வ்யக்ரீபவத்கிங்கரா:॥

என்று ஶப்தசித்ரம் எப்படி இருக்கவேண்டும் என்று சொன்னார் வித்யாநாதன்.

அதுபோல் பந்தத்தில், பத்ம பந்தம், நாக பந்தம், முஸல பந்தம், ரத பந்தம் என்று உள்ளது. ஸ்வாமி இத்தகைய பல பந்தங்களைக் காவ்யங்களில் சிறப்பாகக் கையாண்டுள்ளார். அப்படி ஸாஹித்யத்திலும், ஸம்ப்ர தாயத்திலும், ஶாஸ்த்ரங்களிலும் தலைசிறந்தவராக திகழ்ந்தவர் ஸ்வாமி தேஶிகன். அவரது திருநாமத்தை ஸ்மரித்தாலே நமது பாவங்கள் போய்விடும். அப்படிப் பட்ட ஒரு மஹான் அவர்.

**காவ்யேஷு மாக: கவி காளிதாஸ:** என்ற உயர்ந்த கவியான மஹாகவி காளிதாஸன்,

मन्द: कवियश: प्रार्थी गमिष्यामुपहास्यताम् ।
प्रांशुलभ्ये फले लोभादुद्बाहुरिव वामन: ॥

**மந்த: கவியஶ: ப்ரார்த்தீ கமிஷ்யாமுபஹாஸ்யதாம் ।**
**ப்ராம்ஶுலப்யே பலே லோபாதுத்பாஹுரிவ வாமந: ॥**

என்று **ரகுவம்ஶத்தைச்** சொல்ல விழையும் தன்னை

மந்தபுத்தியுடையவன் என்று சொல்லிக்கொண்டார். அதேபோல் ஸ்வாமி தேஶிகனும் ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் தன்னைச் சொல்லிக்கொள்கிறார்,

धत्ते मुकुन्दमणिपादुकयोर्निवेशा-
 द्वल्मीकसम्भवगिरां समतां ममोक्तिः ।
गङ्गाप्रवाहपतितस्य कियानिव स्या-
 द्रथ्योदकस्य यमुनासलिलाद्विशेषः ॥

**தத்தே முகுந்தமணிபாதுகயோர்நிவேஶாத்**
**வல்மீகஸம்பவகிராம் ஸமதாம் மமோக்தி: ।**
**கங்காப்ரவாஹபதிதஸ்ய கியாநிவ ஸ்யாத்**
**ரத்யோதகஸ்ய யமுநாஸலிலாத்விஶேஷ: ॥**

மஹாகவி காளிதாஸன் செய்த **மேக ஸந்தேஶம்** என்ற க்ரந்தத்திற்கு பதில் ஸ்வாமி தேஶிகன் **ஹம்ஸ ஸந்தேஶம்** என்ற க்ரந்தத்தை அநுக்ரஹித்தார். மேலும், கிருஷ்ணமிஶ்ரர் என்ற ஒரு பெரிய கவி செய்த प्रबोधचन्द्रोदयं **ப்ரபோதசந்த்ரோதயம்** என்ற நாடக க்ரந்தத்திற்கு பதிலாக सङ्कल्पसूर्योदयं **ஸங்கல்பஸூர்யோதயம்** என்ற நாடக க்ரந்தத்தை அருளிச்செய்தார் ஸ்வாமி.

ஸ்ரீராமாயணத்தினுடைய பெருமையானது,

कामार्थगुण संयुक्तं धर्मार्थगुण विस्तरम् ।
समुद्रमिव रत्नाढ्यं सर्वश्रुति मनोहरम् ॥

**காமார்த்தகுண ஸம்யுக்தம் தர்மார்த்தகுண விஸ்தரம் ।**
**ஸமுத்ரமிவ ரத்நாட்யம் ஸர்வஶ்ருதி மநோஹரம் ॥**

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலே **தத்தே முகுந்த மணிபாதுகயோ**ர் என்று தொடங்கும் பாதுகா ஸஹஸ்ர ஶ்லோகத்தில், **வல்மீகஸம்பவகிராம் ஸமதாம் மமோக்தி**: என்பதால் பாதுகா ஸஹஸ்ரமானது வால்மீகி பகவான் அருளிய ஸ்ரீராமாயணத்திற்கு ஸமமானது என்று

ஸ்ரீராமபாதுகையின், ஸ்ரீரங்கபாதுகையின் ப்ரபாவத்தால் தனக்கு ஏற்பட்ட கவிதா மேன்மையையைச் சொல்கிறார். மேலும்,

निश्शेषमम्बरतलं यदि पत्रिका स्या-
त्सप्तार्णवी यदि समेत्य मषी भवित्री ।
वक्ता सहस्रवदनः पुरुषः स्वयं चे-
ल्लिख्येत रङ्गपतिपादुकयोः प्रभावः ॥

**நிஶ்ஶேஷமம்பரதலம் யதி பத்ரிகா ஸ்யாத்**
**ஸப்தார்ணவீ யதி ஸமேத்ய மஷீ பவித்ரீ ।**
**வக்தா ஸஹஸ்ரவதந: புருஷ: ஸ்வயம் சேத்**
**லிக்யேத ரங்கபதிபாதுகயோ: ப்ரபாவ: ॥**

என்ற ஶ்லோகத்தில் அளவிடமுடியாத ஆகாஶத்தைக் காகிதமாக்கி, ஸப்தஸமுத்ரங்களின் ஜலத்தையும் மையாக்கி, ஆயிரம் தலைகள் கொண்ட ஆதிஶேஷன் சொல்ல முற்பட்டாலும் ஸ்ரீரங்கபாதுகையின் ப்ரபாவத்தைச் சொல்ல இயலாது என்று ஸாதித்தார். அவ்வளவு கடினம் என்று ஸாதிக்கிறார் ஸ்வாமி. இதே ஶ்லோகத்தை நாம் ஸ்வாமி தேஶிகனுக்குப் பொருத்தினால், அவரது பெருமையை எடுத்தியம்ப முடியாது. அவர் பண்ணுகிற ஶ்லோகம் ஒவ்வொன்றுமே ஸம்மதமாக இருக்கும்; பதங்கள் ஒவ்வொன்றும் நேர்த்தியாக இருக்கும்; அனைவராலும் ஒத்துக்கொள்ளப் படக்கூடியதாக இருக்கும். இந்த காலகட்டத்தில், ஸௌஜன்யம் மிகவும் முக்கியம்; தௌர்ஜன்யம் கூடாது. நாம் செய்யும் ஶ்லோகங்கள் யாருக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடாது. **எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு** என்றார் திருவள்ளுவர்.

இதிலே மெய்ப்பொருள் எனப்படுவது மெய்ஞானம்- ஆத்மஞானம். நாம் எந்த ஶாஸ்த்ரத்தை, காவ்யத்தைக் கற்றாலும் அதிலுள்ள ஆத்மவிஷயத்தை, பகவத் விஷயத்தை க்ரஹித்துக்கொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

अनन्तशास्त्रं बहुलाश्च विद्या: अल्पश्चकालो बहुविघ्नता च।
यत्सारभूतं तदुपासनीयं हंसो यथा क्षीरमिवाम्बुमध्यात्।

**அநந்தஶாஸ்த்ரம் பஹுலாஶ்ச வித்யா:**
**அல்பஶ்சகாலோ பஹுவிக்நதா ச ।**
**யத்ஸாரபூதம் ததுபாஸநீயம் ஹம்ஸோ**
**யதா க்ஷீரமிவாம்புமத்யாத்॥**

இவ்வாறு, எது ஸாரமோ அதை எடுத்துக்கொண்டு, எது அஸாரமோ அதை விட்டுவிடவேண்டும். அதுதான் நமது ஸ்வரூபம்.

ஒருஅத்வைதிஅடியேனைப்பார்த்து,"ஸர்வஜ்ஞன் என்று தேஶிகன் தன்னை சொல்லிக்கொள்கிறாரே, எம்பெருமான் ஒருவர் தானே ஸர்வஜ்ஞன்" என்று கேட்டார். **ஸர்வஜ்ஞத்தவம் தத்வமுக்தா கலாபே** என்று ஸ்வாமி தேஶிகன் ஸாதிக்கிறார். இந்த காரணத்தாலே ஸர்வஜ்ஞத்வம் உண்டு என்று சொல்லிக்கொண்டார் ஸ்வாமி. அவர் கவிதாஜிதர், ஜிதக்ரோதர், ஜிதாமித்ரர், ஜிதேந்த்ரியர். அப்படிப்பட்ட ஒரு மஹான் ஸ்வாமி தேஶிகன். காவ்ய வல்லுனர்களும், ஶாஸ்த்ர வல்லுனர்களும் நியமித்த வக்த்ரு வைலக்ஷண்யம், விஷய வைலக்ஷண்யம், ப்ரபந்த வைலக்ஷண்யம், என அனைத்து லக்ஷணங்களும் குறைவின்றிப் பொருந்தியவை ஸ்வாமியின் க்ரந்தங்கள்.

**ந தைவதம் தேஶிகாத் பரம் -**

ஸ்வாமி தேஶிகனை விஞ்சிய ஒரு தெய்வம் கிடையாது, அவரைப்போன்ற ஒரு ஆசார்யனும் கிடையாது.

आत्मैक्यं देवतैक्यं त्रिकसमधिगता तुल्यतैक्यं त्रयाणां
अन्यत्रैश्वर्यमित्याद्यनिपुण-फणितीराद्रियन्ते न सन्तः।
त्र्यन्तैरेककण्ठैस्तदनुगुण-मनु-व्यास-मुख्योक्तिभिश्च
श्रीमान्नारायणो नः पतिरखिलतनुर्मुक्तिदो मुक्तभोग्यः॥

**ஆத்மைக்யம் தேவதைக்யம்**
**த்ரிகஸமதிகதா துல்யதைக்யம் த்ரயாணாம்**
**அந்யத்ரைஸ்வர்யமித்யாத்யநிபுண-**
**பணிதீராத்ரியந்தே ந ஸந்த:।**
**த்ரய்யந்தைரேககண்டைஸ்ததநுகுண-**
**மநு-வ்யாஸ-முக்யோக்திபிஸ்ச**
**ஸ்ரீமாந்நாராயணோ ந: பதிரகில**
**தநுர்முக்திதோ முக்தபோக்ய: ॥**

என்று **பரதேவதா பாரமார்த்யாதிகார**த்தில் ராமானுஜ தர்ஶனத்தை ஸாதித்து ரக்ஷணம் பண்ணுவதிலேயே நோக்கு உடையவராக எழுந்தருளியிருந்தார் ஸ்வாமி.

षडंगादिवेदो मुखे शास्त्रविद्या
कवित्वादि गद्यं सुपद्यं करोति
मनश्चेन्न लग्नं गुरोरङ्घ्रिपद्मे
ततः किं ततः किम् ततः किम् ततः किम्।

**ஷடங்காதிவேதோ முகே ஶாஸ்த்ரவித்யா**
**கவித்வாதி கத்யம் ஸுபத்யம் கரோதி**
**மநஶ்சேந்ந லக்நம் குரோரங்க்ரிபத்மே**
**தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம்।**
என்று ஆதிஶங்கர பகவத்பாதாள் ஸாதிக்கிறார்.

**குருரேவ பராகதி: குருரேவ பராகாஷ்டா குரு ரேவ பரம்ப்ருஹ்ம** என்று ஸதா ஸர்வ காலமும் தனது ஆசார்யனான ஆத்ரேய ராமானுஜரிடத்திலே

ஶ்ரத்தையோடு கற்றவர். **வித்யா ஹ்யேதா சதுர் தஶ** என்றபடி பதினான்கு வித்யைகளை நன்கு அப்யஸித்தார்.
தத்வடீகா என்று ஒரு க்ரந்தம். அந்த க்ரந்தத்தில் **அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா - "அத**" ஶப்தத்திற்கான விளக்கம் மட்டும் 350 பக்கம் எழுதியிருக்கிறார் ஸ்வாமி. அதில் அனுஷ்டுப் ஶ்லோகத்தைப் பொருத்தி, பலவிதமாக விளக்கியிருக்கிறார். அதுபோல் ஹம்ஸ ஸந்தேஶத்தில் **ஸீதாந்வேஷணே ஜாகரூக:** - ஸீதையைத் தேடுவதிலேயே ஊற்றமுடையவனாக இராமன் இருக்கிறான் என்பதை
वंशे जात: सवितुरनघे मानयन् मानुषत्वं
देव: श्रीमान् जनकतनयान्वेषणे जागरूक: ।
प्रत्यायाते पवनतनये निश्चितार्थ: स कामी
कल्पाकारां कथमपि निशां आविभातं विषेहे ॥
**வம்ஶே ஜாத: ஸவிதுரநகே மாநயந் மாநுஷத்வம்**
**தேவ: ஸ்ரீமாந் ஜநகதநயாந்வேஷணே ஜாகரூக: ।**
**ப்ரத்யாயாதே பவநதநயே நிஶ்சிதார்த்த: ஸ காமீ**
**கல்பாகாராம் கதமபி நிஶாம் ஆவிபாதம் விஷேஹே** ॥
விஶேஷண வாசி, விஶிஷ்ட வாசி, வ்யபதேஶம், எல்லாமே பொருந்திய ஶ்லோகங்கள்.

**யதீந்த்ர பணிதி:** என்று பூர்வாசார்யர்கள் வழியிலேயே நின்றவர் ஸ்வாமி தேஶிகன். தானாகப் புதிதாக எதுவும் சொல்வதில்லை என்கிறார். பெரியவர்கள் சொல்லாததை நாம் எதுவும் புதிதாகச் சொல்லக்கூடாது. ஸ்ரீ ஆளவந்தார் ஈஶ்வர ஸித்தி, ஸம்வித் ஸித்தி, ஆத்ம ஸித்தி என்று மூன்று ஸித்திகளைச் சொன்னார். அவர் அருளிய தர்க்க ஶாஸ்த்ரம் சற்றுக் கடினமானது. ஆகம ப்ராமாண்யமும், ஸ்தோத்ர

ரத்னமும் எளிமையானவை. ஆளவந்தார் செய்த **கீதார்த்த ஸங்க்ரஹத்தி**ற்கு ஸ்வாமி தேஶிகன் **கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை** செய்தருளினார். அதுபோல் ஸ்ரீபாஷ்யகாரரின் **கீதா பாஷ்யத்திற்கு** மிக அற்புதமான விளக்கங்கள் கொண்ட **தாத்பர்ய சந்த்ரிகை** செய்தருளினார் ஸ்வாமி. அதுபோல் பகவத் விஷயத்திற்கு வ்யாக்யானமாக **நிகம பரிமளம்** செய்தருளினார். ஆனால் அந்த க்ரந்தம் நமக்கு கிடைக்கப்பெறாமல் போய்விட்டது. அந்த ஆஶ்சர்யமான வ்யாக்யானம் கிடைத்திருந்தால் நமது ஸம்ப்ரதாயத்திற்கு மிகப்பெரிய பொக்கிஷமாக இருந்திருக்கும்.

**கண்ணன் அடியினை எமக்கு காட்டும் வெற்பு –** எம்பெருமானின் திருவடியே திருவேங்கடமலை என்று சொன்னார் ஸ்வாமி. இப்படி எந்த கருத்தானாலும் சுருக்கமாக விளங்கவைத்து விடுவார். அதிலும் ஸ்வமதஸ்தாபனம் செய்வதில் கைதேர்ந்தவர். பூர்வாசார்யர்கள் காட்டிய வழியிலிருந்து நழுவாமல் செல்லக்கூடியவர். க்ரஹண ஶக்தி என்பது ஒருவருக் கொருவர் வேறுபடும்.

आरोग्यं भास्करादिच्छेत् धनं इच्छेत् हुताशनात्।
ज्ञानं च शंकरादिच्छेत् मुक्तिमिच्छेत्जनार्दनात्॥

**ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் தநம் இச்சேத் ஹுதாஶநாத் ।**
**ஞானம் ச ஶங்கராதிச்சேத் முக்திமிச்சேத்ஜநார்தநாத் ॥**

**ஞானப்பிரானையல்லால் நான் கண்ட நல்லதுவே** என்று வராஹப்பெருமானைப் பாடினார் ஸ்வாமி நம்மாழ்வார். மதாயத்தம், குலாயத்தம், தெய்வாயத்தம் என்று, குலப்ரஸூதி ஸம்பவே என்றபடி வருவது ஞானம்.

ஸ்வாமிஒவ்வொருவிஷயத்தையும்கம்பீரமாகவும் (மேன்மையுடனும்) , கபீரமாகவும் (ஆழமாகவும்), தர்க்க ரீதியாகவும், மறுக்கமுடியாதபடியும் ஸாதிப்பார். ஸ்வாமியின் திருக்குமாரரும் ஸ்ரீமத்ஸாரத்திற்கு **ரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹம்** என்ற ஸம்ஸ்க்ருத வ்யாக்யானம் பண்ணினார். ஸம்ப்ரதாய ரக்ஷணத்துக்காக மிகவும் ஶ்ரமப்பட்டுப் பொக்கிஷமான க்ரந்தங்களை அருளினார் ஸ்வாமி தேஶிகன். **அத்யாத்ம க்ரந்த ஸேவானாம் அர்ச்சாவதார ஸேவா ச** என்று எப்போதும் அத்யாத்ம க்ரந்த நிர்மாணத்திலேயே காலக்ஷேபம் செய்தார் ஸ்வாமி. இவருக்கு **ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ர**: என்று பட்டம், அதாவது ஸகல கலைகளிலும் வல்லுனர் என்று பொருள். மநோவாக்காயங்களாலே ஒரு அபசாரமும் செய்யாத உபலக்ஷணமான மஹான். **உள்ளம் உரை செயல்** என்றார் ஆழ்வார். அவ்வாறு த்ரிகரண ஶுத்தியுடன் வாழ்ந்தவர் ஸ்வாமி தேஶிகன். **மந்தஸ்ய ஸாஹஸமிதம் தயயா ஸமேத்யா - வேதாந்த தேஶிகபத விநிவேஶ்ய பாலம்** என்று தன்னை சொல்லிக்கொண்டார் ஸ்வாமி. பாதுகா ஸஹஸ்ரத்திலே **மம மந்த புத்தே, நீசேபி ஹந்த மம மூர்த்தனி நிர்விஶேஷம்**, என்றுசொல்லிக்கொள்கிறார். அதுதான் கவிதாஜித கல்லோலனாக இருந்தார். கல்லோலம் என்றால் கடல் அலை.

निरन्तरं निर्विशतस्त्वदीयमस्पृष्टचिन्तापदमाभिरूप्यम् ।
सत्यं शपे वारणशैलनाथ वैकुण्ठवासेऽपि न मेऽभिलाषः ॥

நிரந்தரம் நிர்விஶதஸ்த்வதீயமஸ்ப்ருஷ்ட
சிந்தாபதமாபிரூபம் ।
ஸத்யம் ஶபே வாரணஶைலநாத
வைகுண்டவாஸேऽபி ந மேऽபிலாஷ: ॥

**ஶரணாகதி தீபிகையில்** தனக்கு ஶரணாகதி தான் வேண்டும் என்று ப்ரார்த்திக்கும் ஸ்வாமி, தேவப்பெருமாளை ஸேவித்தவுடன் வைகுந்தமே வேண்டாம், இங்கேயே அவரை ஸேவித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார். மீமாம்ஸா, ந்யாய, வ்யாகரண க்ரந்தங்களிலும் ஸ்வாமி ப்ரயோகிக்கும் பதங்களே அலாதியானவை. **ஸேஶ்வர, மீமாம்ஸா பாதுகா, ஸேஶ்வர மீமாம்ஸா** என்ற க்ரந்தங்கள் பண்ணினார் ஸ்வாமி. அந்தந்த மதத்தினருக்கு விருத்தமில்லாமல் அப்படியே எடுத்துச் சொல்லும் திறமை அவருக்குத்தான் உண்டு.

आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव तु ।
बुद्धिं तु सारथिं विद्धि मनः प्रग्रहमेव च ।।

**ஆத்மாநம் ரதிநம் வித்தி ஶரீரம் ரதமேவ து ।**
**புத்திம் து ஸாரதிம் வித்தி மந: ப்ரக்ரஹமேவ ச ॥**

மனம் என்ற கடிவாளத்தை ஶாஸ்த்ரங்களால் தான் கட்டுப்படுத்த முடியும். பூர்வாசார்யர்கள் செய்த ஏதாவதொரு ஶாஸ்த்ரத்தைப் பிடித்துக்கொண்டு, அவர்கள் காட்டிய வழியிலே நடந்து மநஸ்ஸைக் கட்டுப் படுத்த வேண்டும். **ந்யாய ஸித்தாஞ்ஜனம், ந்யாய பரிஶுத்தி** போன்ற க்ரந்தங்களைப் புரிந்து கொள்வது மிகக் கடினம். ஆனால் அவற்றிற்கும் நிறையத் தமிழ் வ்யாக்யானங்கள் இப்போது உள்ளன. **ந்யாய விம்ஶதி** என்று ஒரு ஸ்தோத்ர க்ரந்தம் பண்ணினார் ஸ்வாமி. இதற்கும் **தத்வமுக்தா கலாபம்** என்ற க்ரந்தத்திற்கும் தானே வ்யாக்யானம் செய்து **ஸர்வார்த்த ஸித்**தி என்று பெயரிட்டார்.

**ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்கள்:**

काव्यशास्त्रविनोदेन कालो गच्छति धीमताम् **காவ்யஶாஸ்த்ர விநோதேந காலோ கச்சதி தீமதாம்** என்றபடி க்ரந்த நிர்மாணத்திலேயே தன்னுடைய காலத்தை கழித்தவர்

ஸ்வாமி. ஶாஸ்த்ரத்திலும், ஸம்ப்ரதாயத்திலும் மஹாவிஶ்வாஸமுடைய ஸ்வாமி ஶாஸ்த்ர வழியாகவும், ஸம்ப்ரதாய வழியாகவும், வேதாந்த வழியாகவும் அநுஷ்டித்துக் காண்பித்து,

योगीन्द्र: श्रुतिपारग: समरसाम्भोधौ निमग्न: सदा शान्ति क्षान्ति
नितान्त दान्ति निपुणो धर्मैक निष्ठारत: ।
शिष्याणां शुभचित्त शुद्धिजनक: संसर्ग मात्रेण य:
सोऽनयांस्तारयति स्वयं च तरति स्वार्थं विना सद्गुरु: ॥

யோகீந்த்ர: ஶ்ருதிபாரக: ஸமரஸாம்போதௌ
நிமக்ந: ஸதா ஶாந்திக்ஷாந்தி
நிதாந்த தாந்தி நிபுணோ தர்மைக நிஷ்டாரத: ।
ஶிஷ்யாணாம் ஶுபசித்த ஶுத்திஜநக:
ஸம்ஸர்க மாத்ரேண ய:
ஸோऽநயாம்ஸ்தாரயதி ஸ்வயம் ச தரதி
ஸ்வார்த்தம் விநா ஸத்குரு: ॥

என்றபடி எழுந்தருளியிருந்தார்.

ब्रह्मविद्या-प्रदानस्य देवैरपि न शक्यते ।
प्रतिप्रदानमपि वा दद्यात् शक्तित आदरात् ।

**ப்ரஹ்மவித்யா ப்ரதானஸ்ய தேவைரபி ந ஶக்யதே ।**
**ப்ரதிப்ரதாநமபி வா தத்யாத் ஶக்தித ஆதராத் ।**

என்றபடி ப்ரஹ்மவித்யா ப்ரதான நிஷ்டரான ஸதாசார்யனான ஸ்வாமியை நாம் எப்போதும் போற்றி வணங்கவேண்டும்.

**ந்யாய விம்ஶதியில்** ஆசார்யன் என்றால், அக்ஞான த்வாந்தரோகாத், அதாவது அக்ஞான இருளை போக்கடிக்கக்கூடியவர் என்று ஸாதிக்கிறார். மேலும், ஆசார்யலக்ஷணம், ஶிஷ்யலக்ஷணம், ஶிஷ்யனிடத்திலே ஆசார்யன் எவ்வாறு பரிவுடன் இருக்க வேண்டும்,

என்றெல்லாம் விளக்கியிருக்கிறார். ஆசார்யன் வாத்ஸல்யத்துடன்இருக்கவேண்டும்.**வத்ஸம்பாலயதீதி வாத்ஸல்யம். ஶிஷ்யஜன ரக்ஷணானாம் ஶிஷ்யகண பரிபூர்ணானாம்** என்றபடி ஶிஷ்யர்களிடத்திலே பரிவுடனும், க்ருபாமாத்ரப்ரஸன்னாசார்யராகவும் எழுந்தருளியிருந்தார் ஸ்வாமி. ஸ்வாமியின் குமாரர், ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர், இருவருமே ஸ்வாமி யினிடத்தில்அக்ஷரஸஹ அத்யயனம்பண்ணினவர்கள். **அதீதம் அத்யாபிதம் ஆர்ஜிதை ஸஹ** என்றபடி தான் அத்யயனம் பண்ணதை இன்னொருவருக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயரும் பெரிய க்ரந்தங்கள் செய்துள்ளார். அது போல ஒரு ஆசார்யனுக்கு ஶிஷ்யோஜ்ஜீவனம், ஶிஷ்யஜனரக்ஷணம்தான் முக்கியம். எப்போதும் ஶிஷ்யன் நன்றாக இருக்கவேண்டும், அவன் நல்லதே செய்யவேண்டும், நல்லதே பேசவேண்டும் என்று ஆசார்யன் அநுக்ரஹிக்க வேண்டும். **மஹாஸுபாஷித ஸங்க்ரஹத்தில்,**

अक्रोधस्तपसः क्षमा प्रभवितुर्धर्मस्य निर्व्याजता
सर्वेषामपि सर्वकारणमिदं शीलं परं भूषणम् ॥

**அக்ரோதஸ்தபஸ: க்ஷமா ப்ரபவிதுர்தர்மஸ்ய**
**நிர்வ்யாஜதா**
**ஸர்வேஷாமபி ஸர்வகாரணமிதம் ஶீலம் பரம் பூஷணம் ॥**

என்று சொல்லப்பட்டுள்ளது.

वाञ्छा सज्जनसङ्गमे परगुणे प्रीतिर्गुरौ नम्रता
विद्यायां व्यसनं स्वयोषिति रतिर्लोकापवादाद्भयम् ।
भक्तिः शूलिनि शक्तिरात्मदमने संसर्गमुक्तिः खलेषु
एते येषु वसन्ति निर्मलगुणास्तेभ्यो नरेभ्यो नमः ॥

**வாஞ்சா ஸஜ்ஜனஸங்கமே பரகுணே**
**ப்ரீதிர்குரௌ நம்ரதா**
**வித்யாயாம் வ்யஸநம் ஸ்வயோஷிதிரதிர்**
**லோகாபவாதாப்தயம் ।**
**பக்தி: ஶூலிநி ஶக்திராத்மதமநே**
**ஸம்ஸர்கமுக்தி: கலேஷு**
**ஏதே யேஷு வஸந்தி நிர்மலகுணாஸ்தேப்யோ**
**நரேப்யோ நம: ॥**

இந்த நீதிஶதக ஶ்லோகத்தில் **ஐஶ்வர்யஸ்ய விபூஷணம் ஸுஜனதா** என்றார். ஸுஜனதா என்பது ஸௌஜன்யம்.

अष्टादशपुराणानां सारं व्यासेन कीर्तितम् |
परोपकार: पुण्याय पापाय परपीडनम् ||

அஷ்டாதஶபுராணாநாம் ஸாரம் வ்யாஸேந கீர்த்திதம் ।
பரோபகார: புண்யாய பாபாய பரபீடநம் ॥

உபகார ஆசார்யாள், மந்த்ரோபதேஷ்டாள், ஞானோபதேஷ்டாள் இப்படி பலவித ஆசார்யர்கள் உண்டு.

आचिनोति हि शास्त्रार्थान् आचारे स्थापयत्यपि ।
स्वयं आचरते यस्मात् तस्मात् आचार्य उच्यते ॥

**ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தாந் ஆசாரே**
**ஸ்தாபயத்யபி ।**
**ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் தஸ்மாத் ஆசார்ய**
**உச்யதே ॥**

என்றபடி ஆசார்யவர்க்கத்திற்கு ஒரு உதாஹரணமாகவும், உபலக்ஷணமாகவும் எழுந்தருளியிருந்து வாழ்ந்து காட்டியவர் ஸ்வாமி வேதாந்த தேஶிகன். **விஶேஷேண ராகம் வைராக்யம், விகத ராகம் வைராக்யம்** என்று இரண்டு விதமான வைராக்யங்கள்

உண்டு.

मनस्येकं वचस्येकं कर्मण्येकं महात्मनाम् ।

मनस्यन्यत् वचस्यन्यत् कर्मण्यन्यत् दुरात्मनाम् ॥

**மநஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம்**
**மஹாத்மநாம் ।**
**மநஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத்**
**துராத்மநாம் ॥**

**மநஸ் ஏகம் வசஸ் ஏகம் கர்மண் ஏகம் மஹாத்மன:** என்றபடி நாம் மஹாத்மாக்களை நினைவிற்கொண்டு நாமும் அவர்கள் வழி நடக்கவேண்டும். நமக்கு ஜன்ம ஸாபல்யமே அதுதான். இதுமாதிரி க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்ய ஆசார்ய பரம்பரையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் நயினாராசார்யரிடத்திலே அத்யயனம் செய்தவர். **வேதாந்த தேஶிக கடாக்ஷ விவ்ருத்தவேத** என்று அவருடைய தனியனில் வருகிறது. அவர் அருளிய ஸப்ததிரத்ன மாலிகாவில் ஒரு ஶ்லோகம்

दान्तिश्शान्तिश्शुचित्वं विषयविजयिता धीरता निस्स्पृहत्वं

शेषत्वं श्रीशतद्दासजनविषयकं पारतन्त्र्यं च तत्र ।

अक्षोभ्यत्वं पटुत्वं मृदुसमविशता निर्भरत्वानसूये

यस्मिन्नाजानसिद्धं स खलु विजयते वेङ्कटाचार्यवर्य: ॥

**தாந்திஶ்ஶாந்திஶ்ஶுசித்வம்**
**விஷயவிஜயிதா தீரதா நிஸ்ஸ்ப்ருஹத்வம்**
**ஶேஷத்வம் ஶ்ரீஶதத்தாஸஜநவிஷயகம்**
**பாரதந்த்ர்யம் ச தத்ர ।**
**அக்ஷோப்யத்வம் படுத்வம் ம்ருதுஸமவிஶதா**
**நிர்பரத்வாநஸூயே**
**யஸ்மிந்நாஜாநஸித்தம் ஸ கலு விஜயதே**
**வேங்கடாசார்யவர்ய: ॥**

ஆஜாநுபாஹு என்று இராமபிரானைச் சொன்னார்,

ஆஜாநுஶுத்தம் என்று ஸ்வாமி தேஶிகனைச் சொன்னார். ஏனென்றால் அவ்வளவு அநுஷ்டானம், ஶரீரஶுத்தம்.

सद्बुद्धिः साधुसेवी समुचितचरितः तत्त्वबोधाभिलाषी
शुश्रूषुः त्यक्तमानः प्रणिपतनपरः प्रश्नकालप्रतीक्षः ।
शान्तो दान्तोऽनसूयः शरणमुपगतः शास्त्रविश्वासशाली
शिष्यः प्राप्तः परीक्षां कृतविदभिमतं तत्त्वतः शिक्षणीयः ॥

**ஸத்புத்தி: ஸாதுஸேவீ ஸமுகிதசரித:**
**தத்வபோதாபிலாஷீ**
**ஶுஶ்ரூஷு: த்யக்தமாந: ப்ரணிபதநபர:**
**ப்ரஶ்நகாலப்ரதீக்ஷ: ।**
**ஶாந்தோ தாந்தோ(அ)நஸூய: ஶரணமுபகத:**
**ஶாஸ்த்ரவிஶ்வாஸஶாலீ**
**ஶிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷா க்ருதவிதபிமதம்**
**தத்வத: ஶிக்ஷணீய: ॥**

என்று ஆசார்யனானவன் ஶாந்தனாக இருக்கவேண்டும், உதாந்தனாக இருக்கவேண்டும், அஸூயை அற்றவராக இருக்கவேண்டும்.

अहिंसा प्रथमं पुष्पं पुष्पमिन्द्रियनिग्रहः।
सर्वभूतदयापुष्पं क्षमापुष्पं विशिष्यते॥

**அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரியநிக்ரஹ: ।**
**ஸர்வபூததயாபுஷ்பம் க்ஷமாபுஷ்பம் விஶிஷ்யதே ॥**

எக்காரணத்தைக் கொண்டும் பொறாமை (அஸூயை) என்பது இருக்கவே கூடாது. யாரிடத்திலும் அஸூயைப் படாத ஆசார்யன் ஸ்வாமி தேஶிகன். அதனால் தான் **ஶக்திராத்ம தமனே ஸம்பர்க்க முக்தி: காலே** என்றார். அதுபோல ஸதாஸர்வ காலமும் எம்பெருமானின் சிந்தனையிலேயே காலத்தைக் கழித்தவர் ஸ்வாமி

தேஶிகன். ஸம்ப்ரதாய ரக்ஷணத்தையே தனது உயிர் மூச்சாக வாழ்ந்து காட்டியவர். இப்போதும் ஸ்ரீவைகுண்டத்திலே எம்பெருமானுக்கு நித்ய கைங்கர்யம் செய்து கொண்டிருக்கிறார் ஸ்வாமி. **மஹானந்தைகஹேதவே**, அதாவது எம்பெருமானுடைய திருவடிகளே பரமபோக்யம் என்றார் ஸ்ரீஆளவந்தார். ஸம்ப்ரதாய பரிஶுத்தியிலேயே ஸம்ப்ரதாய, ப்ரதாய என்கிறார்.

प्राप्यं ज्ञानं ब्राह्मणात् क्षत्रियाद्वा
    वैश्याच्छूद्राद्वाऽपि नीचादभीक्ष्णम् ।
श्रद्धातव्यं श्रद्धधानेन नित्यं न
    श्रद्धिनं जन्ममृत्यू विशेताम् ॥

**ப்ராப்யம் ஞானம் ப்ராஹ்மணாத் க்ஷத்ரியாத் வா**
**வைஶ்யாச்சூத்ராத்வாபி நீசாதபீக்ஷ்ணம் ।**
**ஶ்ரத்தாதவ்யம் ஶ்ரத்ததாநேந நித்யம் ந**
**ஶ்ரத்திநம் ஜன்மம்ருத்யூ விஶேதாம் ॥**

அடைய வேண்டிய ஞானம் எங்கிருக்கிறதோ அங்கே போய் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். **உயர்வற உயர்நலம் உடையவன் எவனவன், கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பண்ணிய பெருமாயன்** என்றெல்லாம் எம்பெருமான் விஷயமாக ஆழ்வார்கள் ஸாதித்ததையெல்லாம் அபௌருஷேயமான ஶ்ருதி வாக்யங்களுக்கு பௌருஷேய ப்ரமாணங்கள் என்று ஸ்வாமி தேஶிகன் தனது க்ரந்தங்கள் மூலமாக நிர்தாரணம் பண்ணினார். ஸ்வமதஸ்தாபனம், பரமத தூஷணம் இதெல்லாம் உண்டு. மதம் என்பது ஒரு நெறி.

ஶுசித்வம் என்றால் ஶுத்தமானது என்று பொருள்.

பலவிதமான ஶுத்தி உண்டு - ஆஹார ஶுத்தி, ஆத்ம ஶுத்தி, ஸத்வ ஶுத்தி, த்ருவா ஶுத்தி, த்ரவ்ய ஶுத்தி, க்ரியா ஶுத்தி, மந்த்ர ஶுத்தி அனைத்தும் நிறைந்தவர்.

क्रोधाद्भवति संमोहः संमोहात्स्मृतिविभ्रमः।
स्मृतिभ्रंशाद् बुद्धिनाशो बुद्धिनाशात्प्रणश्यति।।

**க்ரோதாத்பவதி ஸம்மோஹ:**
**ஸம்மோஹாத்ஸ்ம்ருதிவிப்ரம: ।**
**ஸ்ம்ருதிப்ரம்ஶாத் புத்திநாஶோ**
**புத்திநாஶாத்ப்ரணஶ்யதி॥**

ध्यायतो विषयान्पुंसः सङ्गस्तेषूपजायते।
सङ्गात् संजायते कामः कामात्क्रोधोऽभिजायते ॥

**த்யாயதோ விஷயாந்பும்ஸ:**
**ஸங்கஸ்தேஷூபஜாயதே ।**
**ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:**
**காமாத்க்ரோதோऽபிஜாயதே ॥**

सिद्धं सत्संप्रदाये स्थिर धियमनघं श्रोत्रियं ब्रह्म निष्ठं
सत्वस्थं सत्य वाचं समय नियतया साधु वृत्तया समेतम् ।
डम्भासूयादि मुक्तं जित विषयि गणं दीर्घ बन्धुं दयालुं
स्खालित्ये शासितारं स्व पर हितपरं देशिकं भूश्णुरीप्सेत् ॥

**ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திர தியமநகம்**
**ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்**
**ஸத்வஸ்தம் ஸத்ய வாசம் ஸமய நியதயா**
**ஸாது வ்ருத்த்யா ஸமேதம் ।**
**டம்பாஸூயாதி முக்தம் ஜித விஷயி**
**கணம் தீர்க பந்தும் தயாலும்**
**ஸ்காலித்யே ஶாஸிதாரம் ஸ்வ பர ஹிதபரம்**
**தேஶிகம் பூஷ்ணுரீப்ஸேத் ॥**

दातृत्वं प्रियवक्तृत्वं धीरत्वमुचितज्ञता ।
अभ्यासेन न लभ्यन्ते चत्वारः सहजा गुणाः ॥
**தாத்ருத்வம் ப்ரியவக்த்ருத்வம் தீரத்வமுசிதஜ்ஞுதா ।**
**அப்யாஸேந ந லப்யந்தே சத்வார: ஸஹஜா குணா: ॥**

தீரம், வீரம், ஶௌரம் எல்லாம் இருந்தது ஸ்வாமியினிடத்திலே. **க்ருபயா நிஸ்ப்ருஹா வதேத்** - எம்பெருமானை தவிர்த்து வேறு இதர விஷயங்களிலே ஈடுபடாத குணத்தையுடையவர் ஸ்வாமி தேஶிகன் - இதுதான் நிஸ்ப்ருஹத்வம். ஸ்ரீஶ்ச தாஸத்வம்- எம்பெருமானும் பிராட்டியுமான மிதுனமே உத்தேஶ்யம் - வேறு எவருக்கும் அடியேனல்லேன் என்ற கொள்கையுடையவர். ப்ரணவார்த்தம் சொல்லும் போதே அகார, உகார, மகார - ஸர்வஶக்தி விஶிஷ்டனான எம்பெருமானே உத்தேஶ்யம், பரஸமர்ப்பணம், பலஸமர்ப்பணம், ஸ்வரூப ஸமர்ப்பணம், கர்த்ருத்வ புத்தி த்யாகம், மமதா த்யாகம் இவையெல்லாம் விரிவாக ஸாதிக்கிறார் ஸ்வாமி. ஶேஷத்வ ஞானம் நிறைந்தவர். லக்ஷ்மணோ பகவத் ஶேஷத்வம் - ஏனென்றால் अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते ஜாக்ரத: ஸ்வபதஶ்ச தே என்று வால்மீகி பகவான் ஸாதித்தார். அப்படி இடைவிடாது கைங்கர்யம் செய்யக்கூடிய ஶேஷத்வ வ்ருத்தியோடு இருந்தார் ஸ்வாமி தேஶிகன்.

அப்படிப்பட்ட மஹானான ஒப்பற்ற ஆசார்யரான ஸ்வாமி தேஶிகனின் திருவடித் தாமரைகளை நாம் மனத்தாலும், வாக்காலும் வணங்கி உய்வடைய வேண்டும் என்று பூர்வாசார்ய பாதுகைகளிடம் ப்ரார்த்திக்கிறேன்.

**நாராயண ! நாராயண! நாராயண!**

**15-12-2023 அன்று
சென்னை திருவல்லிக்கேணி
ஸ்ரீபார்த்தசாரதி சபாவில்
மார்கழி இசைவிழாவைத் துவக்கி வைத்து
ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவராஹ மஹா தேசிகன்
அருளிய அனுக்ரஹ பாஷணம்.**

----------

**ஸ்ரீமதே ரங்கராமானுஜ மஹாதேஶிகாய நம:|
ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹா தேஶிகாய நம:**

मूकं करोति वाचालं पङ्गुं लङ्घयते गिरिं ।
यत्कृपा तमहं वन्दे परमानन्द माधवम् ॥
மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதே கிரிம் ।
யத்க்ருபா தமஹம் வந்தே பரமாநந்த மாதவம் ॥

अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तरः।
पुराणं धर्मशास्त्रञ्च विद्या ह्येताश्चतुर्दश॥
அங்காநி வேதாஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர: ।
புராணம் தர்மஶாஸ்த்ரஞ்ச வித்யா ஹ்யேதாஶ்சதுர்தஶ ॥

இப்படி 14 வித்யைகள் அனைத்துமே வேதத்திலிருந்து பிறந்தவை. ஸங்கீதத்திற்கு ஸப்த ஸ்வரங்கள் என்று பெயர். பொதுவாக ஸங்கீதத்தைப் பற்றி பேசும்போது நாதத்திலிருந்து ஸ்வரமா? இல்லை ஸ்வரத்திலிருந்து நாதமா? என்ற விசாரம் வருவதுண்டு. நாதப்ரஹ்மம் என்பதால் நாதம் தான் உயர்ந்தது என்பது புலப்படுகிறது. ஸ்வரத்திற்கு நாதமா? அல்லது நாதத்திற்கு ஸ்வரமா? என்றால் நாதத்திற்கு தான் ஸ்வரம். ஸங்கீதம் உபவேத மான காந்தர்வ வேதத்தைச் சார்ந்தது. தனுர்வேதம், ஆயுர் வேதம் ஆகியவற்றிற்கு உபவேதம் என்று பெயர்.

பாணிநீ தனது ஸம்ஸ்க்ருத வ்யாகரணமான பாணிநீய ஶிக்ஷையில் சொல்கிறார்,

उदात्त निषादगान्धारौ अनुदात्त ऋषभदैवतौ ।
स्वरितप्रभवा ह्येते षड्ज-मध्यम-पञ्चमा: ॥

உதாத்த நிஷாதகாந்தாரௌ அநுதாத்த
ருஷபதைவதௌ ।
ஸ்வரிதப்ரபவா ஹ்யேதே ஷட்ஜ-மத்யம-பஞ்சமா:॥

மேலும், அமரகோசம் என்னும் கிரந்தத்தில்,

निषाद ऋषभ गान्धार षड्ज मध्यम दैवता: ।
पञ्चमेचेत कवीतप्त तन्त्रीकं प्रोक्तिता स्वरा: ॥
நிஷாத ருஷப காந்தார ஷட்ஜ மத்யம தைவதா: ।
பஞ்சமேசேத் கவீதப்த தந்த்ரீகம் ப்ரோக்திதா ஸ்வரா:॥

ஸ்வரமானது நாதத்திலிருந்து, அதாவது ஒலியிலிருந்து பிறக்கிறது. அந்த நாதத்திற்குத் தலைவன் நாதனாகிய எம்பெருமான்.
नृत्तावसाने नटराजराजो ननाद ढक्कां नवपञ्चवारम्।
ந்ருத்தாவஸாநே நடராஜராஜோ நநாத டக்காம்
நவபஞ்சவாரம் ।

என்றபடி சிவனுடைய உடுக்கையிலிருந்து எழுத்துக்கள் உண்டானதாகப் பாணிநீய ஶிக்ஷையில் சொல்வார்கள். ஸ்வரங்கள் ஏழு. அவற்றைக் கொண்டு பலவிதமான க்ருதிகள், பாடல்கள் தோன்றுகின்றன. शिशुर्वेत्ति पशुर्वेत्ति वेत्ति गानरसं फनि - பநி என்றால் சொல். சங்கீதம் என்பது சொல்லழகு, பொருளழகு அனைத்தும் கொண்டது, மனநிம்மதி தரவல்லது. பாணிநீ பதஶாஸ்த்ரம் (grammar) செய்தார். தர்க்கஶாஸ்த்ரம் என்பது logic. வேதவிசார ஶாஸ்த்ரத்திற்கு மீமாம்ஸா என்று பெயர். வேதத்தில் கடினமாக உள்ள விஷயங்களை இந்த உபவேதங்கள் எளிமையாக எடுத்துரைக்கின்றன. ஸங்கீதம் என்பது வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களை தெரிந்துகொள்வதற்கான் ஒரு வழி.

மனிதன் என்பவனுக்கு ஒரு ஸாஹித்யம் வேண்டும்.

साहित्यसङ्गीतकलाविहीन: साक्षात्पशु: पुच्छविषाणहीन:।
तृणं न खादन्नपि जीवमान: तद्भागधेयं परमं पशूनाम्॥

ஸாஹித்யஸங்கீதகலாவிஹீந: ஸாக்ஷாத்பஶு:
புச்சவிஷாணஹீந: ।
த்ருணம் ந காதந்நபி ஜீவமாந: தத்பாகதேயம் பரமம்
பஶூநாம்॥

ஸாஹித்யமாவது ஜன்ய, ஜனக ராகம் - பாவம், ராகம், தாளம். **ஶ்ருதி மாதா லய: பிதா** என்று சொல்வார்கள். ஒரு ஶ்ருதிக்கு எத்தனை மேலகர்த்தா, இதை யார் செய்தது, எதற்காகச் செய்தது, இந்த க்ருதியின் மூலம் நாம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயம் என்ன என்பதை எல்லாம் தெரிந்து கொள்வது தான் ஸாஹித்யம். அடிப்படை ஸ்வர ஞானமாவது வேண்டும். அடியேனுடைய பிதாமஹர் டைகர்வரதாச்சாரியாரின் ஶிஷ்யர்.

श्रोत्रं श्रुतेनैव न कुंडलेन दानेन पाणिर्न तु कंकणेन।
विभाति काय: करुणापराणां परोपकारैर्न तु चन्दनेन।।
ஶ்ரோத்ரம் ஶ்ருதேநைவ ந குண்டலேந
தாநேந பாணிர்ந து கங்கணேந ।
விபாதி காய: கருணாபராணாம்
பரோபகாரைர்ந து சந்தநேந ॥

என்றபடி பிதாமஹர் ஸங்கீதத்தை கேட்டுக் கேட்டு அடியேனுடைய ஸ்வாமிக்கு அதீத ஸங்கீத ஞானம் ஏற்பட்டது. ஸங்கீதம் கேட்பதற்கு இனிமையாக இருப்பது மட்டுமல்லாமல் எல்லாவித நன்மைகளும் கொடுக்கக்கூடியது. ஒரு மனிதனுக்கு ஸங்கீத ஞானம் முக்கியமாக இருக்கவேண்டும் என்று **பர்த்ருஹரி** என்ற ஒரு கவி தனது க்ரந்தத்திலே எழுதியுள்ளார்.

ஸங்கீதத்தில் ஸ்வரம் மிகவும் முக்கியமானது. ஸாமவேத ஸாரம் தான் ஸங்கீதம். வேதத்தில் உதாத்த, அநுதாத்த, ஸ்வரித ஸ்வரங்கள் முக்கியம் என்று சொல்லப்பட்டுள்ளது. உதாத்த ஸ்வரமானது நிஷாதம், காந்தாரம்; அநுதாத்த ஸ்வரமானது ருஷபம், தைவதம்; ஸ்வரிதமாவது ஷட்ஜம்,

மத்யம், பஞ்சமம். இவற்றில் பஞ்சமம் மிகவும் இனிமையாக இருக்கும். பிக: கூஜதி पञ्चमम् என்றபடி குயில் பாடுவது பஞ்சமம். **யாழினிசையே! அமுதே! அறிவின் பயனே! அரிஏறே**! என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ள யாழினிசையும் பஞ்சமம் தான்.

सर्वेषु गात्रेषु शिर: प्रधानं – सर्वेन्द्रियाणां नयनं प्रधानम् |
षण्णां रसानां लवणं प्रधानं – भवेत् नदीनाम् उदकं प्रधानम् ||

ஸர்வேஷு காத்ரேஷு ஶிர: ப்ரதாநம் –
ஸர்வேந்த்ரியாணாம் நயநம் ப்ரதாநம் ।
ஷண்ணாம் ரஸாநாம் லவணம் ப்ரதாநம் –
பவேத் நதீநாம் உதகம் ப்ரதாநம் ॥

இந்த ஶ்லோகம் ஒரு மனிதனுடைய ஶரீரத்தில் முக்கியமானது ஶிரஸ் என்று சொல்கிறது. அதுபோல ஸங்கீதத்திற்கு முக்கியமாக நாபீசக்ரமாக இருப்பது வீணை. வீணைக்கு முக்கியம் தந்திகள்.

**ஸங்கீத மார்த்தாண்டம், ஸங்கீத ரத்நாகரம்** என்று பல நூல்கள் ஸங்கீத ஶாஸ்த்ரத்திற்கு உள்ளன. நான்கு வேதங்கள் ஒவ்வொன்றுக்கும் உபவேதங்கள் உண்டு.

ऋग्वेदस्य आयुषोवेद: यजुशो धनुराह्वय: ।
साम्नो गान्धर्ववेदस्यात् अर्थशास्त्रं अथर्वण: ॥

ருக்வேதஸ்ய ஆயுஷோவேத: யஜுஶோ தநுராஹ்வய: ।
ஸாம்நோ காந்தர்வவேதஸ்யாத் அர்த்தஶாஸ்த்ரம்
அதர்வண:॥

இப்படி, ருக்வேதத்திற்கு உபவேதம் ஆயுர்வேதம்; யஜுர் வேதத்திற்கு உபவேதம் தநுர்வேதம்; ஸாமவேதத்திற்கு உபவேதம் காந்தர்வவேதமாகிய ஸங்கீதம்; அதர்வண வேதத்திற்கு உபவேதம் அர்த்தஶாஸ்த்ரம். ஆக, ஸாமவேதமும், காந்தர்வவேதமும், ஸங்கீதமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. **ஸாமவேதகீதனாய சக்ரபாணியல்லையே** என்று ஆழ்வார் அருளிச்செய்துள்ளார். वेदानाम् सामवेदोस्मि என்று கீதாசார்யன் அருள்கிறான். ஸாமவேதத்திற்கு அந்தர்கதமாக இருப்பது ஸங்கீதம்.

நாதம் தான் உலகத்திற்கு அதீனம் என்பதை
नादेन व्यज्यते वर्ण: पदं वर्णात् पदात् वच: ।
वचसो व्यवहारोयं नादाधीनं मतोजगत् ॥
நாதேந வ்யஜ்யதே வர்ண: பதம் வர்ணாத் பதாத் வச: ।
வசஸோ வ்யவஹாரோயம் நாதாதீநம் மதோஜகத்॥
என்ற ஶ்லோகம் சொல்கிறது. நாதத்திலிருந்து அதாவது ஒலியிலிருந்து எழுத்துக்கள் (வர்ண:) தோன்றுகின்றன. அக்ஷர ஸமூஹம் பதம், பத ஸமூஹம் வாக்யம். பதம் வர்ணம் என்றால் பத வர்க்கங்கள். இவை அனைத்துக்குமே நாதம் தான் அதீனம். வாக்கிற்கு முக்கியமானதும் நாதம் தான்.
जिह्वाग्रे वसते लक्ष्मी: जिह्वाग्रे मित्रबान्धवा: ।
जिह्वाग्रे बन्धनं चैव जिह्वाग्रे मरणं ध्रुवम् ॥
ஜிஹ்வாக்ரே வஸதே லக்ஷ்மீ: ஜிஹ்வாக்ரே மித்ரபாந்தவா: ।
ஜிஹ்வாக்ரே பந்தநம் சைவ ஜிஹ்வாக்ரே மரணம் த்ருவம் ॥

நாக்கானது, **செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்** என்று **ஆண்டாள்** அருளிச்செய்தபடி நல்ல விஷயங்களையே எப்போதும் பேச வேண்டும், கேஶவாதி திருநாமங்களையே ஜெபிக்கவேண்டும்.
गीतं नादात्मकं वाद्यं नादव्यक्त्या प्रशस्यते ।
तद्द्वयानुगतं नृत्तं नादाधीनमतस्त्रयम्॥
கீதம் நாதாத்மகம் வாத்யம் நாதவ்யக்த்யா ப்ரஶஸ்யதே ।
தத்வயாநுகதம் ந்ருத்தம் நாதாதீநமதஸ்த்ரயம் ॥

ஸ்வரத்திற்கு **கீதம், வாத்யம், ந்ருத்தம்** என்ற மூன்றும் வேண்டும். இந்த மூன்றுமே நாதத்திலிருந்து தான் வருகின்றன. கீதத்திற்கு அங்கங்கள் பதினெட்டு. அடுத்து ஶ்ருதி - निरपेक्षो रव: शृति: என்றபடி ஶ்ருதி என்றால் வேதம் என்றும் கேட்பது என்றும் பொருள். அடுத்தது ஸ்வரம் – க்ராமம் என்றால் ஸ்வர சமுதாயம். பிறகு மூர்ச்னா - ஸங்கீதத்திலேயே ஈடுபட்டு மூர்ச்சையாகும் நிலை. மேலும் தான - அதிலேயே

லயித்திருப்பது, वर्णा: - ஆவளி வரிசைகளைச் சொல்வது, अलङ्कारो - ஜன்ய, ஜனக ராகங்களுடைய கமகங்கள். ராகத்தினுடைய அங்கம் ஸ்வரங்கள். ஸவரத்திற்கு பாஷை உண்டு. स्वाभिप्रायाविष्करण भाषा என்றபடி தனது அபிப்ராயத்தைச் சொல்வது பாஷை. ஸ்வரபாஷையினுடைய அங்கங்கள் மூன்று - **சேஷ்டிதம், நிமிஷிதம், இங்கிதம். சேஷ்டிதம்** என்றால் வாய் திறந்து சொல்லாமலேயே செய்கையால் புரிய வைப்பது, **நிமிஷிதம்** என்றால் நாட்டிய ஶாஸ்த்ரத்தில் வருவது போல் கண்ஜாடை காட்டிப் புரியவைப்பது, **இங்கிதம்** என்றால் சொல்லாமலேயே என்ன தேவை என்று குறிப்பறிந்து கொண்டு செயல்படுவது. ताण्डवं नटनं नाट्यं लास्यं नृत्यं च नर्तने - இவை நாட்ய வர்க்கங்கள். மேலும் விதேஶ ஸங்கீதமான ஹிந்துஸ்தானி முதலியவைகளையும் ஸ்வதேஶ ஸங்கீதத்தையும் மிஶ்ரம் பண்ணுவது ஆகியவை கீதத்தின் அஷ்டாதஶ அங்கங்கள்.

நாதத்திற்கு இரண்டு அங்கங்கள்- आगतोऽनागतश्चेति द्विधा नादो निगद्यते என்றபடி ஆகதம், அநாகதம் என்பவை. तस्त्र अनागतं नादं एकाग्र न्यस्त मानस: - அநாகதம் என்பது ஏகாக்ர சிந்தனை, அதாவது நாதத்தை விட்டு மனம் வெளியே செல்லாமல் லயித்திருக்கவேண்டும். ஸ்வரம் பாடும்போது எவ்வளவு இடையூறு இருந்தாலும் பாடகரின் கவனம் ஸ்வரத்தில் தான் இருக்கவேண்டும். गुरु उपदिष्ट मात्रेण महान्त: पर्युपासते - குருவருள் இல்லையென்றால் திருவருள் இல்லை.

गुरु शुश्रूषया विद्या पुष्कलेन धनेन वा ।
अथ वा विद्यया विद्या चतुर्थो न उपलभ्यते ॥

குரு ஶுஶ்ருஷயா வித்யா புஷ்கலேந தநேந வா ।
அத வா வித்யயா வித்யா சதுர்தோ ந உபலப்யதே॥

இதிலே ஶுஶ்ருஷை என்பது श्रोतुम इच्छा शुश्रूषा: - குரு சொல்வதை எல்லாம் கேட்டுக்கொள்வது தான் ஶுஶ்ருஷை. எந்த வித்யைக்கும் குரு தான் முக்கிய காரணம். குரு இல்லாமல் வித்யை கைகூடாது. **பீதகவாடை பிரானார் பிரமகுருவாகிவந்து** என்று அருளிச்செய்தார் ஆழ்வார்.

நாதோத்பத்தி க்ரமம் - அதாவது நாதம் எப்படி உத்பத்தி ஆனது என்றால்

आत्मा विवक्षमाणोऽयं मनः प्रेरयते मनः ।
नाभिस्थं वह्निमाहन्ति स प्रेरयति मारुतम् ॥

ஆத்மா விவக்ஷமாணோऽயம் மந: ப்ரேரயதே மந: ।
நாபிஸ்தம் வஹ்நிமாஹந்தி ஸ ப்ரேரயதி மாருதம்॥

मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः என்று அனைத்திற்கும் மனம் தான் காரணம். வாயுவை விடவும் மனசு வேகமானது. आत्मा विवक्षमाणोऽयं - ஆத்மாவினால் தெரிந்துகொள்ள வேண்டும். ஆத்மா நித்யமானது என்று கீதாசார்யன் அருள்கிறான் -

न जायते म्रियते वा कदाचि न्नायं भूत्वा भविता वा न भूयः।
अजो नित्यः शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे॥

ந ஜாயதே ம்ரியதே வா கதாசித் நாயம்
பூத்வா பவிதா வா ந பூய: ।
அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ
ந ஹந்யதே ஹந்யமாநே ஶரீரே ॥

मनः प्रेरयते मनः - மனம் தான் அனைத்து இந்த்ரியங்களும் இயங்க காரணமானது. அதுதான் அனைத்தையும் அழைக்கிறது. नाभिस्थं वह्निमाहन्ति स प्रेरयति मारुतम् - ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு முக்கியம் காற்று. அதிலும் हृदि प्राणो गुदेऽपानः समानो नाभि मण्डले என்றபடி நாபி மிக முக்கியம். नाभि हृदकण्ठ मूर्धा என்ற ஐந்திலும் வாயு ஸமானமாக இருக்கவேண்டும். ஸங்கீதத்தில் த்வனியானது நாபியிலிருந்தும், கண்டத்திலிருந்தும், ஹ்ருதயத்திலிருந்தும், ஶிரஸ்ஸிலிருந்தும் வர வேண்டும். ராகங்களில் ஸூக்ஷ்ம, அதிஸூக்ஷ்ம, புஷ்ட, அபுஷ்ட க்ருத்ரிமம் என்று பலவிதமான க்ருத்ரிமங்கள் உண்டு. नाकारं प्राणनामस्य - நாதத்தின் முதல் எழுத்து "நா" தான் ஸங்கீதத்திற்கு உயிர் போன்றது. உயிர் (ப்ராணன்) தான் ஒரு மனிதனுக்கு மிகவும் பிடித்தமானது - प्रणोहि प्रियं प्रियतमं प्रजानाम् - என்று வேதம் சொல்கிறது. दकारश्च अनलोमतः - அனலோ என்றால் அக்நி. நமது உடலில் ஜாடராக்நி, ப்ராணாக்நி

ஆகியவை இருக்கின்றன. நமது ப்ராணாக்நியிலிருந்து தான் नाद इत्यविदीयते என்று நாதமானது தோன்றுகிறது. அந்த நாதத்தில் नादस्य द्वाविंशति भेदा: என்று 22 பேதங்கள் உண்டு - हृदि ऊर्ध्व नाडी संलग्ना: - மனஸு, ஸ்வர மாத்திரைகள், நாடி, லயம். एवं गण्ठे तदा शीर्शे श्रुतिर्द्वाविंशतिर्मत: - शीर्शம் என்றால் ஶிரஸ். प्रथम: श्रावण शब्द: என்று ஶ்ரவணம்- கேட்டல் தான் ப்ரதமம். शाश्वति संपरिज्ञेय: स्वरावयव लक्षणा: - ஸ்வரங்களின் அவையவங்கள், லக்ஷணங்கள் என்ன என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். द्वाविंशति श्रुतीनां सप्तस्वरे अंतर्भाव: - ஸ்வரங்கள் ஏழு. அந்த ஏழு ஸ்வரங்களிலிருந்து எவ்வளவோ க்ருதிகள். இசை மும்மூர்த்திகள், புரந்தரதாஸர், அன்னமாச்சார்யர் முதலான பல வித்வான்கள் பலவிதமான க்ருதிகளைச் செய்துள்ளனர்.

सन्तोषार्थं विमृशति मुहु: सद्भिरध्यात्मविद्यां
नित्यं ब्रूते निशमयति च स्वाद-सुव्याहृतानि ।
अङ्गीकुर्वन्ननघ-ललितां वृत्तिमादेहपातात्
दृष्टादृष्ट-स्वभर-विगमे दत्तदृष्टि: प्रपन्न: ॥

ஸந்தோஷார்த்தம் விம்ருஶதி முஹு:
ஸத்மிரத்யாத்மவித்யாம்
நித்யம் ப்ரூதே நிஶமயதி ச ஸ்வாது-சுவ்யாஹ்ருதாநி ।
அங்கீகுர்வந்நநக-லலிதாம் வ்ருத்திமாதேஹபாதாத்
த்ருஷ்டாத்ருஷ்ட-ஸ்வபர-விகமே தத்தத்ருஷ்டி: ப்ரபந்ந: ॥

என்று ஸ்வாமி தேஶிகன் ஸாதிக்கிறார். ஸாதுக்கள் பலவிதமுண்டு. ஆனால் அத்யாத்மவித்யையை விமர்ஶனம் பண்ணவேண்டும்.

चतुश्चतुश्चतुश्चतुश्चैव षड्जमध्यमपंचमा: ।
द्वे द्वे निषाद गांधारौ त्रिसत्री ऋषभदैवतौ॥

சதுஶ்சதுஶ்சதுஶ்சதுஶ்சைவ ஷட்ஜம்
மாத்யமபஞ்சமா: ।
த்வே த்வே நிஷாத காந்தாரௌ த்ரிஸ்த்ரீ ருஷபதைவதௌ॥

இப்படி ஸ்வர-ஶ்ருதிகளின் எண்ணிக்கைகள் சொல்லப்பட்டிருக்கிறது.

**காயக பேதம்**, அதாவது பாடுபவர்களின் வகைகளாவன,
शिक्षको भावकश्चैव रञ्जको रसिकस्तथा।
अपर:कुटिकाराख्य: पञ्चधा गायकास्स्मृता: ॥
ஶிக்ஷகோ பாவகஶ்சைவ ரஞ்சகோ ரஸிகஸ்ததா ।
அபர:குடிகாராக்ய பஞ்சதா காயகாஸ்ஸ்ம்ருதா:॥

இதிலே காயகர்கள்-பாடுபவர்கள் ஐந்து விதம் என்று சொல்லப்பட்டுள்ளது - ஶிக்ஷகன் – ஆசார்யன்; பாவகன் – நல்ல பாவம் உடையவன்; ரஞ்சகன் – ஸங்கீதத்திலேயே ஊன்றி இருப்பவன்; ரஸிகன் – ரஸிக்கும் தன்மையுடையவன்;
कृतं वाग्गेयकारेण श्रुतं गृह्णात्यनुक्तकम् ।
नाविस्मरन्सावधान: शिक्षाकार: स कथ्यते ॥
க்ருதம் வாக்கேயகாரேண ஶ்ருதம்
க்ருஹ்ணாத்யநுக்தகம் ।
நாவிஸ்மரந்ஸாவதாந: ஶிக்ஷாகார: ஸ கத்யதே ॥

ஒரு ஆசார்யனாக ஶிஷ்யனுக்கு நன்றாக ஸங்கீதத்தை போதிக்க வேண்டும். சுமாரான ஶிஷ்யனைக் கூட நல்ல வித்வானாக மாற்றுவது ஆசார்யனின் திறமை. ஞானத்தைப் பற்றி சொல்லும்போது,
ग्रहणं धारणं चैव स्मरणं प्रतिपादनम् ।
ऊहापोहार्थविज्ञानं तत्त्वज्ञानं च धीगुण: ॥
க்ரஹணம் தாரணம் சைவ ஸ்மரணம் ப்ரதிபாதநம் ।
ஊஹாபோஹார்த்தவிஜ்ஞாநம் தத்வஜ்ஞாநம் ச தீகுணா: ॥

க்ரஹணம் - ஆசார்யன் சொல்வதை பிடித்துக்கொள்ளுதல்; தாரணம்- தரித்தல்; ஸ்மரணம் – நினைத்தல்; ப்ரதிபாதநம் – எடுத்துரைத்தல்; ஊஹம் – தர்க்கித்தல்; தத்வஞானம் – பொருள்கூறுதல்; உண்மை அறிதல் புரிந்துகொள்ளுதல் என்று இவையெல்லாம் சேர்ந்ததுதான் ஞானம். இப்படி சொல்லிக்கொடுப்பவனே ஶிக்ஷகன். गृह्णात्यनुक्तकं – தான் சொல்வதை ஶிஷ்யனை சொல்லவைக்க வேண்டும். नविस्मरत् सावधान: - எப்பவும் ஸாவதானம் செய்து கொண்டே

இருக்கவேண்டும்.
பாவக லக்ஷணம் என்னவென்றால்,
रसाहानौ न सन्धत्ते निर्भावे भावमानयेत्।
रागं करोति वेदग्ध्यात् भावकस्सोभिधीयते ॥
ரஸாஹாநௌ ந ஸந்தத்தே நிர்பாவே பாவமாநயேத் ।
ராகம் கரோதி வைதக்த்யாத் பாவகஸ்ஸோபிதீயதே॥

ராகத்திற்கு ரஸங்கள் ஶ்ருங்காரம் முதலாக ஆறு வகை. ஸங்கீதம் கற்றுக்கொடுக்கும் குருவானவன் தனது ஶிஷ்யன் அந்தந்த ராகத்ருஷ்டியினுடைய ரஸம் தவறாமல் பாடுகிறார்களா என்று கவனித்துக் கற்றுத்தர வேண்டும். மேலும் ராக விஶேஷத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவை எல்லாம் பாவக லக்ஷணங்கள்.
ரஞ்சக லக்ஷணமாவது ஶிஷ்யனுக்கு புரியும்படி கற்றுக் கொடுப்பது.
श्रोतृणां हृदयं ज्ञात्वा तेषाम् चित्तानुसारतः ।
गायन् रञ्जयते यस्तु स रञ्जक इति स्मृतः॥
ஶ்ரோத்ருணாம் ஹ்ருதயம் ஞாத்வா தேஷாம்
சித்தாநுஸாரத: ।
காயந் ரஞ்சதே யஸ்து ஸ ரஞ்சக இதி ஸ்ம்ருத: ॥

தான் கற்றுக்கொடுத்தது ஶிஷ்யனுடைய ஹ்ருதயத்தில் எப்படிப் பதிந்திருக்கிறது என்று புரிந்து கற்றுத்தர வேண்டும்.
ரஸிக லக்ஷணமாவது

स्निग्धामात्मश्रुतिं कृत्वा भृशमानन्दभाग्भवेत् ।
पुलकाञ्चितसर्वाङ्गो गाता च रसिकस्मृतः ॥
ஸ்நிக்தாமாத்மஶ்ருதிம் க்ருத்வா
ப்ருஶமாநந்த பாக்பவேத் ।
புலகாஞ்சிதஸர்வாங்கோ காதா ச ரஸிகஸ்ம்ருத: ॥
ஸ்நிக்தாம் ஆத்மஶ்ருதிம் -
ரஸிகர்கள் பாடகர்களுக்கு மிகவும் ஆத்மார்த்த மானவர்களாக, நெருங்கியவர்களாக இருக்கவேண்டும்.

निजमानन्द भाष्यवेद - பாடகனும் ரஸித்து பாட வேண்டும் கேட்பவர்களுக்கும் ஆனந்தத்தை கொடுக்க வேண்டும். जनरञ्जात्मकं काव्यं என்றபடி ஸங்கீதமும் ஜனரஞ்சகமாக இருக்க வேண்டும். पुलकाङ्कित सर्वाङ्गो गाथा: रसिक स्मृत: என்று ஒரு காயகனின் ஸங்கீதமானது கேட்பவர்களுக்கு மயிர்க்கூச்செறியும்படி இருக்க வேண்டும்.

இதுபோன்று ஸங்கீதம் நன்றாகக் கற்றுக்கொண்டு நாம் வாழ்நாளில் ஸந்தோஷமாக இருக்கவேண்டும் என்று விழைகின்றேன்.

**நாராயண ! நாராயண! நாராயண!**

இப்படி ஸ்ரீமத் ஆண்டவன் தன் அருளுரையாம் இசைப் பேருரையை நிறைவு செய்தார். ஸபையில் அமர்ந்திருந்த பல விருதுகள் பெற்ற ப்ரபல ஸங்கீத வித்வான்கள் ரஸித்துக் கேட்டு ஸந்தோஷத்துடன் ஸ்ரீமதாண்டவனிடம் அநுக்ரஹம் பெற்றுக்கொண்டார்கள்.







ஸ்ரீ தேசிகன்